www.tamilarangam.net

# களத்தில்

இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (28.01.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (153) அன்பளிப்பு: 60 p

# ஐம்பதாண்டு அக்கிரமங்களை அகிலத்துக்கு உரைக்க எழுவோம்!

## சுதந்திரமறுப்பு, ஜனநாயகப்பறிப்பு - இறைமை பொதுவானதன் விளைவு! தாயகம், தேசியம் - தன்னாட்சி பெற்றாலே நம் சுதந்திரம் மலரும் !!

நாமென்ன பேசும் சக்தியற்ற மனிதர்களா? எம் சந்ததியின் உயிரைக் குடிக்கும் சர்வாதி ...ச் சந்திரிகா அரசாங்கம் ...நாயக அரிதாரம் பூசி அரங்கேற்றும் சுதந்திரப் பொன் விழா நாடகத்தின் உண்மைகளை உலகுக்கு கூறாது மௌனமாக இருப்பதற்கு! நாமென்ன நடக்கும் சக்தியற்ற மனிதர்களா?, எங்கள் சகோதரர்கள் சாகடிக்கப்படுகையில் அவர்களுக்காய் அகிலத்துத் தெருக்களில் அணிநடையிட்டு ஆதரவு தேடாது பதுங்கி வாழ்வதற்கு! ஆதலால், நம்மவர் சாகும் கொடுமையின் காரணம் கூற விரைந்தெழுவோம்! இன்று நம்நாடு வேகும் உண்மை கூறத் துடிதுடித்தெழுவோம்! நேற்று நாம் எப்படிச் சுதந்திரமாய் எம் தாயகத்தில் வாழ்ந்தோம். அது எப்படி போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிகளில் தொடர்ந்தது? ஆயினும், பிரித்தானியர் செய்த இணைப்புகளால், ஆட்சி முறைகளால் நாம் எப்படி எமது தாயகத் தனித்துவத்தை

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

## புங்குடுதீவில் தேசவிரோதக்குழுவின் முகாம் முற்றாக அழிப்பு

சிறிலங்கா இராணுவத்தின் அனுசரணையுடன் புங்குடு தீவில் அமைக்கப்பட்டு, போராளிகள் குறித்த தகவல்களை சிறிலங்காப் படையினருக்கு வழங்கவும், தமிழ்ப் பொதுமக்கள் மீது தாக்கு தல்கள் நடாத்த துணை செய்யவும் இயங்கி வந்த ஈ.பி.டீ.பீ தேசவிரோதக் குழுவின் முகாம் வெள்ளிக்கிழமை 23-01-98 அன்று முற்றாக தாக்கியழிக்கப்பட்டு, முகாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட 'தாக்த் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்புமற்ற இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்ததும் 8 ற்கும் மேற்பட்ட தேச விரோதிகள் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமிலிருந்தவர்களே விடுதலைப்புலிப் போராளிகளான மேஜர் ஆனியன், கப்டன் அரவிந்தன் ஆகியோரது வீரச்சாவிற்குக் காரணமாயிருந்தனர் எனவும் தலைமைப்பீடக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.



மண்ணிலொரு பிடியெனினும்
அள்ளவரும் கைதறிக்கக் காத்திருக்கும் தமிழர் சேனை

## விடுதலைப் புலிகளின் நிர்வாகச் சிறப்பு பற்றி பல்கலைக்கழக ஆய்வாளர் கருத்து

- ✳ செல்வங்கள் மறுபகிர்வு
- ✳ மாற்றுப் பொருளாதாரத் திட்டங்கள்
- ✳ புதிய சமூக நலச் சட்டங்கள்

விடுதலைப் புலிகளின் ஆட்சி யாழ். குடாநாட்டில் நிலவிய பொழுது அங்கே சிறப்பான ஆட்சி நடைபெற்றது என பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அவுஸ்திரேலிய கிறிஸ்தவ பல்கலைக் கழக ஆசிய மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறையின் உப பொறுப்பாளரான கலாநிதி ஏ.இ. செல்வநாதன் 'கிறீன் வேல்ட்' வார சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில்,

"பிரதேசத்தினுடைய செல்வம் விடுதலைப் புலிகளின் ஆட்சியின் பொழுது சிறந்தமுறையில்

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

## பொன்விழா கொண்டாட இருந்த தலதா மாளிகையில் குண்டு வெடிப்பு

- ✳ 11 பேர் மரணம்
- ✳ 20 பேர் காயம்
- ✳ ரத்வத்த வீறாப்பு

சிறிலங்கா அரசாங்கம் தனது 50வது சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடத் திட்டமிட்டிருந்த கண்டி 'தலதா' மாளிகையில் குண்டு வெடித்து, கடுஞ்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டி மாநகர் பெரியளவில் அதிர்ந்ததாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. இச்செய்தித்தாள் அச்சுக்குப் போகும் இறுதி நேரத்தில் கிடைத்த கொழும்புச் செய்திகளின்படியும் சர்வதேச செய்தி முகவர்களின் செய்திகளின்படியும், சுதந்திரப் பொன்விழா கொண்டாடத் திட்டமிட்டிருந்த இடமாகிய தலதா மாளிகையில் 25-01-98 ஞாயிறு காலை 6 மணியளவில் பலத்த பாதுகாப்பு

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மக்களின் உணவுப் பிரச்சினை

## வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஸ் அவர்களின் அறிக்கை

**"வன்னி பெருநிலப்பரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளாகக் கருதப்படும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4 லட்சமாக இருந்தபோதிலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் 275,000 மக்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படுகின்றது" என்று வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். வன்னி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற உணவு விநியோகம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு–**

"வன்னிப்பிரதேச இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளாகக் கருதப்படும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் கீழ் அடங்கும் பிரதேசங்களில் அரசாங்க அதிபர்களின் கணக்கீடுகளின்படி ஒருதொகை மக்கள் வதிகின்றார்கள். அவ்வாறு வதிகின்ற மக்களில் இடம்பெயராத மக்களின் தொகை 94 ஆயிரமாகவும் உள்ளூரில் இடம் பெயர்ந்தோரின் தொகை 98 ஆயிரமாகவும் ஏனைய மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தோர் தொகை கிட்டத்தட்ட 300,000 ஆகவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அரசாங்க அதிபர்களினால் தரப்பட்டுள்ள விபரங்கள் சம்பந்தமாக ஒருவித ஐயப்பாடு நிலவுகின்றது. இக்காரணத்தால் மொத்தமாக வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4 லட்சமாக இருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் 275,000 மக்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படுகின்றது.

> மொத்தமாக வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4 லட்சமாக இருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன் 275,000 மக்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படுகின்றது.

### உணவு விநியோகம்

உணவு விநியோகம் இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனுப்பக்கூடிய உணவுப் பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, அரசாங்கத்தின் போக்குவரத்துச் செலவில் அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இடம்பெயராத மக்களுக்குரிய உணவுத்தேவைகள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு, ப.நோ.கூ சங்கங்களினூடாக உணவுப்பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. 1997ஆம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை தொடர்வதற்கு முன்பதாக தேவையான அளவு உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும் மே மாதத்தின் பின்பு அனுப்பப்படுகின்ற உணவுப் பொருட்களின் அளவு பின்வரும் காரணிகளால் முழுமையாக அனுப்ப இயலாது போயிற்று."

(1) பொருட்கள் அனுப்ப வேண்டிய லொறிகள் செல்லுகின்ற பாதை திசைதிருப்பப்பட்டு, கண்டி–யாழ்ப்பாணம் வீதிக்குப் பதிலாக வவுனியா–மடு ரோட் சந்தி, பாலம்பிட்டி–பள்ளமடு–பெரியமடு–வெள்ளாங்குளம்–துணுக்காய்–மல்லாவி–ஸ்கந்தபுரம்–தர்மபுரம்–புதுக்குடியிருப்பு–வவுனியா வடக்கில் உள்ள நவ்வி போன்ற இடங்களுக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் தூரம் 110 கிலோமீற்றரினாலும் கிளிநொச்சி மாவட்டத்தின் தூரம் 110 கிலோமீற்றரினாலும் வவுனியாவுக்குரிய தூரம் 140 கிலோமீற்றரினாலும் அதிகரித்துள்ளது. இக்காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் லொறிகள் சென்றுவர எடுக்கின்ற காலம் கிட்டத்தட்ட நான்கு நாட்களாகின்றன. சென்றுவரும் நேரம் அதிகரித்தமையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்திலுள்ள பாரவூர்திகள் ஏற்றியிருக்கும் உணவின் அளவு குறைந்துள்ளது.

(2) கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள பாரவூர்திகளுக்குரிய ரயர், ரியூப் என்பனவற்றை மாற்றும் நடவடிக்கை கடந்த மாதம்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை.

(3) அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் உணவுப் பொருட்கள் கிட்டத்தட்ட 75–80% அனுப்பப்பட்டிருப்பினும் ப.நோ.கூ சங்கங்களினால் எடுத்துச்செல்லப்படும் உணவின் அளவு கிட்டத்தட்ட 80 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்குரிய காரணம் கொண்டுசெல்லப்படும் உணவுப்பொருட்களை கொள்வனவு செய்யும் சக்தி மக்களிடையே இருக்கவில்லை. மக்களின் கொள்வனவு செய்யும் சக்திக் குறைவிற்கு இப்பிரதேசங்களின் வேலைவாய்ப்பின்மை, அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படாமை, அதற்குப்பதிலாக சமுர்த்தித் திட்டம் செயற்படுத்தப்படாமை போன்ற காரணங்களாகும். எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் விற்கப்படாமையால் கிட்டத்தட்ட சகல ப.நோ.கூ சங்கங்களினதும் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. இதனால் சங்கங்களின் செயற்பாடுகள் இறங்குநிலையில் காணப்படுகின்றன.

(4) பாதைச்சீர்கேடு. உணவுத்தொடர் வண்டிகள் செல்லும் பாதை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்பட வேண்டியதொன்றாகும். எனினும் இப்பாதை கடந்த 10–18 வருடங்களாக எதுவித பராமரிப்பும் செய்யப்படவில்லை.



இதற்குரிய நிதி ஒதுக்கீட்டைத் தருமாறு போக்குவரத்து அமைச்சு, மாகாணசபை என்பவற்றிடம் சம்பந்தப்பட்ட சகல அரசாங்க அதிபர்களும் வேண்டுகோள் விடுத்தபோதிலும் இற்றைவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. கடந்த 22, 23, 24 ஆகிய திகதிகளில் இப்பிரதேசங்களிற்கு சென்றிருந்தபோது, கிட்டத்தட்ட 15 இடங்களில் உணவுப் பொருட்களுடன் லொறிகள் செல்ல இயலாதவாறு அண்மைக்காலத்தில் பெய்த மழையினால் பாதை சீர்குலைந்திருப்பதைக் காணமுடிந்தது. இருப்பினும் கட்டுபபாடற்ற பிரதேசங்களில் லொறிகளை வைத்திருக்கும் உரிமையாளர்களும், பாரவூர்திச் சங்கமும் தேவையான பொருட்களை எடுத்துச் செல்வதில் எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் கண்ணும் கருத்துடனும் செயற்படுகின்றார்கள். கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் ஓரளவு உணவுப்பொருட்கள் இருப்பினும் மக்களிடையே கொள்வனவு சக்தி இல்லாமை, உலர் உணவு பெற்றுக் கொள்வோருக்கு அவர்களுக்குரிய முழு அளவிலான உணவு வழங்கப்படாமை இப்பிரதேசங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலமைக்கு வழிவகுக்கின்றது.

இக் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### இக் குறைபாடுகளை நிவர்த்திக்கும் நடவடிக்கைகள்

* லொறிகளுக்குரிய ரயர், ரியூப் என்பன மற்றும் லொறிகளின் தொகையை மாதத்திற்கு 08இலிருந்து 24ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

* உலர் உணவு பெற்றுக்கொள்ளும் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட 5 கிலோ கிராம் உணவு குறைவாகக் கிடைக்கின்றது. இக் குறையை ஈடுசெய்யுமாறு உலக உணவுத்திட்ட பிரதிநிதி அவர்களுக்கு வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினூடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ப.நோ.கூ சங்கங்களிலிருந்து கடனாகப் பெற்றுக் கொண்ட சகல உணவுப் பொருட்களுக்குமான அளவைப் பதிலீடு செய்வதற்கு அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இம் மாதம் 112 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப்படுகின்றன. மீதிப்பொருட்கள் அடுத்த மாதம் அனுப்பப்படும்.

* சமுர்த்தித் திட்டம் இப் பிரதேசங்களில் அமுலாக்கப்படும் வரை, வறுமைக் கோட்டிற்குள் வதியும் மக்களுக்கு வறுமை நிவாரண உதவி தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

* வவுனியா மாவட்டத்தில் கடந்தகாலப் பகுதிக்கான வரட்சி நிவாரணம் கொடுக்கப்பட்டிருப்பினும் ஏனைய மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏனைய 3 மாவட்டங்களிற்கும் வரட்சி நிவாரணம் விஸ்தரிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளோம்.

* அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேலதிக உணவுப் பொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வவுனியா மாவட்டத்தில் 2,900 குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் இவ் வாரம் தொடக்கம் அனுப்பப்படுகின்றது.

* இக்காலபோகத்தில் நல்ல மழை பெய்த காரணத்தினால் விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்புள்ளது. இருப்பினும் தேவையான மண்ணெண்ணை வழங்கப்படவில்லை. 4 மாவட்டங்களிற்கும் விவசாய நடவடிக்கைக்காக மாதாந்தம் 5000 பரல் மண்ணெண்ணையாவது வழங்குமாறு நீண்டகாலமாக அரசாங்க அதிபர்கள் கோரி வருகிறார்கள். இக் கோரிக்கைகள் கொள்கையளவில்

தொடர்ச்சி 6 ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சுதந்திரப்போராட்டம் தொடர்கிறது

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து விலகி 04-02-1998 உடன் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது. ஆனாலும், இலங்கைத் தமிழர்கள் காலனித்துவத்தினால் இழந்த தமது அரசியல் உரிமைகளை பெறுவதற்கென ஆரம்பித்த சுதந்திரப் போராட்டம் இன்றும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதனை 1975இல், சிறிலங்காவின் ஆட்சியை நிராகரித்து சிறிலங்கா பாராளுமன்றத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரகடனப்படுத்திய தந்தை செல்வநாயகம் பின்வருமாறு தெளிவாக எடுத்துரைத்தார்.

"காலனித்துவ மேலாண்மை ஏற்படும் வரை சிங்களவர்களும் தமிழர்களும் தனித்தனியான இறைமைகளைக் கொண்ட இரு வேறு மக்கள் தொகுதிகளாக இந்த இலங்கைத்தீவில் காலாதிகாலமாக வாழ்ந்து வந்தனர்: தமிழர்கள் காலனித்துவத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் தமது சுதந்திரத்தையும் மீளப் பெறலாம் என முழுமையாக நம்பியே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாங்களும் கடந்த 25 ஆண்டுகளாக ஐக்கிய இலங்கையின் கீழ் சிங்களவர்களுக்குச் சமத்துவமான முறையில் எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எடுக்கக்கூடிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டோம். வேதனை மிகுந்த உண்மை என்னவென்றால் சுதந்திரத்தின் மூலம் கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதன் பிறகு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் எமது அடிப்படை உரிமைகளை மறுத்து எம்மை ஒரு அடிமை இனமாக மாற்றுவதற்கு முயன்று வருகின்றனர். இந்த அரசுகள் இவ்விதம் செய்வதற்கு தமிழர்களதும் சிங்களவர்களதும் இறைமைகள் பொதுவாக வைக்கப்பட்டமையே காரணமாக உள்ளது. நான் இந்தத் தேசத்திற்கும் எனது மக்களுக்கும் அறிவிக்க விரும்புவது என்னவென்றால், எனது தேர்தல் வெற்றி மூலம் தமிழீழ தேச மக்கள் தம் இறைமையைப் பயன்படுத்தி தாம் விடுதலை பெறத் தீர்மானித்துள்ளனர் என்பதேயாகும்"

இந்த சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை அடுத்து, 1976 தமிழீழத் தேசத்தை மீள அமைப்பதற்கான பிரகடனம் விடுக்கப்பட்டு, அது 1977 பொதுத் தேர்தல் மூலம் குடியொப்ப அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது. இந்தக் குடியொப்ப அங்கீகாரத்திற்கான தேர்தல் பிரகடனம், தமிழீழத் தேசம் எவ்வாறு மீட்கப்படல் வேண்டும் என்பதையும் பின்வருமாறு எடுத்து விளக்கியது

"தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தமது தாயகத்தில் தமது இறைமையை மீள நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளனர். இந்த முடிவை உலகுக்கும் சிங்கள அரசிற்கும் அறிவிப்பதற்கான ஒரே வழி எமக்கு நீங்கள் வாக்கு அளிப்பதேயாகும். உங்கள் வாக்குகளால் இலங்கைத் தேசிய அரசசபைக்குத் தெரிவு செய்யப்படும் தமிழ்ப் பிரதிநிதிகள் தம்மை தமிழீழ தேசிய அரசசபையாக மாற்றியமைத்து, தமிழீழ தேசத்துக்கான அரசியலமைப்பை தயாரித்து அதனை அமுலாக்குவதன் மூலம் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நிறுவிக் கொள்வர். இது அமைதியான வழிகளிலோ அல்லது நேரடி நடவடிக்கைகள் மூலமோ அல்லது போராட்டத்தின் மூலமோ எய்தப்படும்."

எனவே தமிழீழப் போராட்டத்திற்கான குடியொப்ப அங்கீகாரம், 1977 பொதுத் தேர்தல் மூலம் சட்டபூர்வமாகப் பெறப்பட்டது. சிறிலங்கா அரசு அமைதி வழிகளில் தமிழீழத் தேச விடுதலையை அனுமதிக்காமல் தமிழ் மக்கள் மீதான போர் ஒன்றைத் திணித்தது. இதனை எதிர்த்து தமது உயிரையும் உடமைகளையும் தேசத்தையும் பாதுகாக்க தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமையில் நடாத்திவரும் சுதந்திரப் போராட்டமே, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமாகும். இந்தப் போராட்டத்தின் வெற்றிகளால் தமிழீழத் தேசத்தின் பொரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்பட்டு தமிழீழத் தேசவிடுதலையை தமிழீழ மக்கள் நெருங்கி வருகின்றனர்.

இதனால் தமிழீழ மக்களின் மனஉறுதியை, போராட்ட வலிமையை, விடுதலை உணர்வை தனது ஆயுதப் படைகளாலும் அசைக்க முடியாது எனக்கண்ட சிறிலங்கா, தனது சந்தை நலன்களையும் இராணுவ கேந்திர வசதிகளையும் சர்வதேச நாடுகளுக்கு வாரிவழங்கி அதன்மூலம் அவர்களது பலத்தைப் பெற்று, தமிழீழ விடுதலையை நிர்மூலமாக்குவதற்கான செயற்திட்டமொன்றை சந்திரிகா அரசு பதவியேற்ற நாள் முதல் விரைவுபடுத்தி வ்ருகிறது.

இதற்கு உதவியாக, உடந்தையாக உள்ள சர்வதேச நாடுகள், நிதி உதவிகளையும் ஆயுத வழங்கல்களையும் பயிற்சிகளையும் அளிப்பதற்கு சர்வதேச சட்டங்களை வளைப்பதற்கு வசதியாக சிறிலங்காவில் ஜனநாயகம், சுதந்திரம் காணப்படுவது போன்ற பொய்த் தோற்றங்களை சந்திரிகா அரசு தோற்றுவித்து வருகிறது. இதன் முதற்கட்டம் பேச்சுவார்த்தை நாடகம். அடுத்தது சமாதானத்திற்கான போர். தொடர்ந்தது அரசியற் தீர்வுப் பொதி. தற்பொழுது 'பொன் விழா' பொன் முலாம்.

எனவே தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்தின் தேவையை எடுத்து விளக்கி, பொன்விழா பொன்முலாம் பூச்சைக் களைய வேண்டிய பொறுப்பு, புலம்பெயர் தமிழர்களாகிய நமது கடமை. தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அடிப்படைகளை எய்தும்வரை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு சுதந்திரப் போராட்டமாகத் தொடரும் என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக்கூறி, ஐம்பது ஆண்டு காலமாக எமது மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியே, காலனித்துவத்திற்கு எதிராக தமிழர்கள் தொடங்கிய சுதந்திரப் போராட்டத்தை முடிவடைய வைக்கும் என்பதை எடுத்து விளக்குவோம்.

இதனைச் செய்வதற்கு உலகு எங்குமுள்ள தமிழர்கள் செயற்படுத்தவுள்ள திட்டங்களிலும் பேரணிகளிலும் இனமான உணர்வுடன் அனைத்துத் தமிழர்களும் முழுப்பங்களிப்பையும் நல்குவோம்! ✳

# துப்பாக்கி முனையில் சனநாயகம்! சமாதானம்!

## சந்திரிகா அரசின் வேதாளத் தத்துவம்

சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா அரசாங்கம், புதிய சமாதானத் தத்துவத்தையும் ஜனநாயகச் தத்துவத்தையும் உருவாக்கி வருகின்றது.

> கவலைதரும் கடந்த கால அனுபவங்களை, மக்களை எப்படி மறக்கவைக்க வைப்பது என்பதுதான் தற்போதைய பிரச்சினை. விடுதலைப் புலிகள் குறித்துப் போட்ட தப்புக்கணக்குகளின் அறுவடையை, அரசியல் இராணுவ ரீதியாக பெற்றாயிற்று. அதிலிருந்து புதிய தெளிவு ஏற்படச் சாத்தியமில்லை.

சமாதானத்திற்கான யுத்தம் என்ற முரண்பட்ட நூதனமான சமாதானத்துக்கான தத்துவத்தை உலகஅரங்கில் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள சந்திரிகா அரசாங்கம், ஜனநாயகத் தேர்தலுக்கு துப்பாக்கி என்ற விந்தையான தத்துவத்தையும் உருவாக்கியுள்ளது.

இரண்டும் தமிழ்மக்களை அடிமை கொள்ள வைக்கின்ற நகர்வுகளே என்பது சொல்லிப் புரியவைக்கவேண்டிய விடயங்களே அல்ல.

இன்று, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் யாவும் சகசநிலை தோன்றிவிட்டது: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே மக்கள் பணிகளை ஆற்றும் சூழல் ஏற்படுத்தப்பட்டுவிட்டதென உலகுக்குக் காட்ட, அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஜனநாயக நாடகத்திற்கும் துப்பாக்கிகளே முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தேர்தலை நடத்தி 'முடிப்பதென்பதற்காகவே, பல்லாயிரக்கணக்கான சிங்களப்படையினர் குடாநாட்டில் குவிக்கப்பட்டுள்ளனர். தேர்தலில் நின்று வெற்றிபெற்று வருமாறு, வாழ்த்தி தமிழ்க்குழுக்களுக்கு சந்திரிகா அரசாங்கம் ஆயுதங்கள் கொடுத்து அனுப்பியிருக்கின்றது. தமிழ்க்குழு ஒன்றிற்கு 1,500க்கு மேற்பட்ட ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன என, வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று மோப்பம் பிடித்து செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதான், சனநாயகத் தேர்தலை வரவேற்கின்ற சூழ்நிலைகள்.

சந்திரிகா அரசாங்கத்தின் அகராதியில், வேட்பாளர்கள் ஆயுதபாணிகளாக குழுக்களாகச் சென்று, மக்களை மிரட்டி நடத்துவதே சனநாயகத்திற்கான பிரச்சாரப் பணியாகின்றது. ஊர்பேர் தெரியாத, முகம் தெரியாத வேட்பாளர் பட்டியலில் உள்ள யாருக்காவது வாக்களித்தே தீரவேண்டும் என்பது சந்திரிகா அரசின் சனநாயகத்தின் பேரிலான கட்டாயமாகின்றது.

குடாநாட்டில், உறுமிக்கொண்டு செல்லும் இராணுவ கனரக வாகனங்களின் துப்பாக்கி மிரட்டலுக்கு மிரண்டுபோயிருக்கும் தமிழ்மக்கள், தற்போது, வேட்பாளர்களாக வந்திருக்கும் ஆயுதபாணிகளின் ஆயுத மிரட்டல்களால் ஆடிப்போயுள்ளனர்.

மக்களை மயக்கநிலையில் வைத்து, தேர்தலை வெற்றிகொள்ள தமிழ்க்குழுக்கள் தமக்கிடையே போட்டிபோட்டுக்கொண்டு தெருவுக்குத் தெரு தண்ணீர்ப்பந்தல்கள் போன்று இலவச மதுபானக் கடைகளை விரித்துள்ளன.

இந்தத் தேர்தலை, தமிழ்மக்கள் விரும்பவில்லை. மதத்தலைவர்கள் விரும்பவில்லை. மக்கள் அமைப்புக்கள் விரும்பவில்லை. ஆனால் தேர்தல் நடத்துவதென சிங்களஅரசாங்கம் விரும்பியுள்ளது. தேர்தலில் போட்டியிட்டு தமது ஆசனக் கனவுகளைத் தீர்த்துக்கொள்ள தமிழ்க்குழுக்களும் விரும்புகின்றன. இதுதான் சந்திரிகா அரசின் சனநாயகத் தேர்தல் இலட்சியம்.

முன்பும் இதுபோன்ற தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்திய ஆக்கிரமிப்பு காலத்தில் நடந்த தேர்தலும் அதேபாணியில் நடத்தப்பட்டுள்ளது. அப்போதும் சனநாயகத் தேர்தல் நடத்தப்பட்டதாகவும், மக்களாட்சி அமைக்கப்பட்டுள்ளதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டன. பின்னர் 94இலும் சனநாயக மீட்பின் பேரால் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல்களின்போது, சனநாயகம் காப்பாற்றப்பட்டதா..? இல்லை குழி தோண்டிப் புதைக்கப்பட்டதா..? இதற்கு, இதனை நடத்தியவர்களுக்கும் மக்களுக்கும் நன்றாகவே விடை தெரியும். ஆனால் உலகை ஏமாற்ற, தமது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொண்டு சனநாயக வேடம் போட இத் தேர்தல்கள் அவர்களுக்கு அவசிய தேவையாகின்றன.

அதன் முதிர்ச்சிபெற்ற ஒரு வடிவமாகவே, சந்திரிகா அரசின் குடாநாட்டுத் தேர்தல் எனலாம்.

ஒருபுறம் பாதை திறப்பென்றபேரில், மனித அழிப்பு பிரதான பாத்திரம் ஏற்றிருக்கும் ஆக்கிரமிப்பிற்கு பாதை திறக்கும் முயற்சி. மறுபுறம் சனநாயக அழிப்பு பிரதானம் பெற்றுள்ள தேர்தல் நாடகம்.

இவற்றை ஒருசேர நடத்தியபடி, மறுபுறத்தில் தீர்வுத்திட்டம் என்ற கோசம்.

> இந்தத் தேர்தலை, தமிழ்மக்கள் விரும்பவில்லை. மதத்தலைவர்கள் விரும்பவில்லை. மக்கள் அமைப்புக்கள் விரும்பவில்லை. ஆனால் தேர்தல் நடத்துவதென சிங்களஅரசாங்கம் விரும்பியுள்ளது.

தொடர்ச்சி14ம் பக்கம்.....

### - சுப்பு -

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தமிழர்களை இராணுவ முற்றுகைக்குள் அடிமைப்படுத்த மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் சூட்டிய பெயர் சமாதானத்திற்கான யுத்தம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெந்த புண்ணில் கீறி மகிழ்வதா!

இன்று தமிழீழ மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் அகதிகளாக அவதியுறும் அவலநிலை ஒரு புறம், சிங்கள இராணுவத்தின் குண்டுவீச்சுத் தாக்குதலின் அகோரத்தின் மத்தியில் மறுபுறமும், திறந்த வெளிச் சிறைச்சாலையாக விளங்கும் குடாநாட்டில் பயமும் பீதியுமாக இன்னொரு புறமும் சொல்லொணாத் துன்பத்துடன் அவல வாழ்வை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் சிறிலங்கா அரசின் சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்ட ஆரவாரங்களும், குடாநாட்டிற்கான உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளும் வெந்த புண்ணில் கீறி மகிழ்வதாகவே அமைகின்றது.

யாழ் குடாநாட்டை நோக்கி மேற் கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் சிறிலங்கா அரசு பாதுகாப்புக் காரணத்தைக் காட்டியே அனுமதி மறுத்து வந்தது.

■ சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் களுத்துறைச் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளினால் கோரமாகக் கொல்லப்பட்ட தமிழ்க் கைதிகளின் உடலக்ளை அவர்களின் சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தது, அதற்கு தகுந்த பாதுகாப்பின்மையே காரணமெனக் காட்டப்பட்டது.

■ சர்வதேச செய்தித் தாபனங்களும், மனித உரிமை நிறுவனங்களும் குடாநாட்டிற்கு சுயமாகச் சென்று உண்மை நிலையை அறிவதற்கு சிறிலங்கா அரசு தடை விதிக்கின்றது. அதற்கும் பாதுகாப்பின்மையே காரணமாகக் கூறப்படுகின்றது.

— மண்மகள்

■ கடந்த ஆண்டு இராணுவ பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட உள்ளூர்ப் பத்திரிகையாளர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்த போதும், பாதுகாப்புக் காரணத்தை சுட்டிக் காட்டியே மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

■ உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து குடாநாட்டை நோக்கி படையெடுத்த தமிழ்க் குழுக்களுக்கு சிறிலங்கா அரசு ஆயுதங்களை வழங்கியது. தமது சொந்த மக்களைச் சந்திக்கப் போகும் இக்குழுக்களுக்குப் பாதுகாப்பு காரணத்துக்காகவே ஆயுதம் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது.

> இனவிரோதம் கொண்ட சிறிலங்கா அரசின் தேர்தல் நாடகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி பங்கு கொள்ளும் கொழும்புத் தமிழ்க்குழுக்கள் யார் என்பதை தமிழீழ மக்கள் நன்கு அறிவர். தமிழீழத்தை முன்னுக்கு வைத்து விடுதலை இயக்கங்களென வெளிக்கிட்ட இவர்கள், கொழும்புத் தமிழ்க் குழுக்களென குறுகிப் போயுள்ளார்கள். அன்னியன் காலில் வீழ்ந்து தமிழனைக் காட்டிக் கொடுத்தவர்கள், எதிரியுடன் இணைந்து தமிழினத்தை ஏலம் போட்டார்கள். தமிழீழ மக்களின் சுதந்திர உணர்வைக் காற்றில் பறக்கவிட்ட இக்குழுக்களிடமிருந்து குடாநாட்டு மக்கள் எதையுமே எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதும் எவரும் அறியாத விடயமல்ல. தமிழீழ மக்களிடமிருந்து நீண்ட தூரம் விலகிச் சென்ற இக்குழுக்கள், வயிறு வளர்க்கும் நோக்கோடு தேர்தல் களம் சென்றுள்ளார்கள். சந்திரிகாவின் முந்தானையில் தொங்கும் இவர்களுக்குத் தமிழீழ மக்கள் என்ன பரிசளிக்கப் போகின்றார்கள்?

■ அண்மையில் கொழும்பு அமெரிக்கத் தூதுக்குழு குடாநாட்டிற்குச் செல்வதற்கு முற்பட்ட போதும் அரசு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டியே அதை நிறுத்தியுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்களைப் பார்க்கும் போது, பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி அனுமதி மறுத்த சிறிலங்கா அரசு குடாநாட்டு மக்களுக்கு என்ன பாதுகாப்பின் அடிப்படையில் தேர்தல் அறிவிப்பைச் செய்தது? பாதுகாப்பாகச் செல்லமுடியாத இடத்தில் எப்படித் தேர்தல் சாத்தியமாகும்?

இத்தேர்தல் மூலம் ஜனநாயகத்தையும், தமிழீழ மக்களின் அரசியல் உரிமைகளையும் சிறிலங்கா அரசு வெளிப்படையாகக் குழிதோண்டிப் புதைக்கின்றது. மறுபுறத்தில் பார்க்கும் போது தமிழீழ மக்கள் மீது திணிக்கப்படும் இன அழிப்பின் ஒரு கட்டமாகவே இத் தேர்தல் நடவடிக்கை அமைந்துள்ளது. இதுபோன்ற இன விரோதம் கொண்ட சிறிலங்கா அரசின் தேர்தல் நாடகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி பங்கு கொள்ளும் கொழும்புத் தமிழ்க்குழுக்கள் யார் என்பதை தமிழீழ மக்கள் நன்கு அறிவர். தமிழீழத்தை முன்னுக்கு வைத்து விடுதலை இயக்கங்களென வெளிக்கிட்ட இவர்கள், கொழும்புத் தமிழ்க் குழுக்களென குறுகிப் போயுள்ளார்கள். அன்னியன் காலில் வீழ்ந்து தமிழனைக் காட்டிக் கொடுத்தவர்கள், எதிரியுடன் இணைந்து தமிழினத்தை ஏலம் போட்டார்கள். தமிழீழ மக்களின் சுதந்திர உணர்வைக் காற்றில் பறக்கவிட்ட இக்குழுக்களிடமிருந்து குடாநாட்டு மக்கள் எதையுமே எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதும் எவரும் அறியாத விடயமல்ல. தமிழீழ மக்களிடமிருந்து நீண்ட தூரம் விலகிச் சென்ற இக்குழுக்கள், வயிறு வளர்க்கும் நோக்கோடு தேர்தல் களம் சென்றுள்ளார்கள். சந்திரிகாவின் முந்தானையில் தொங்கும் இவர்களுக்குத் தமிழீழ மக்கள் என்ன பரிசளிக்கப் போகின்றார்கள்?

சீழ்வடியும் நிலையில் இனப்பிரச்சினை புரையோடிப்போயிருக்கும் இவ்வேளை, சிறிலங்கா அரசானது சுதந்திர தினப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் மூலம் தனது நாற்றத்தை மறைக்க முயலுகின்றது. வன்னிக்கள வெற்றி, உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி, ஆர்ப்பாட்டமான பொன்விழாக் கொண்டாட்டமென பல்வேறு கனவுகளைக் காண்கிறது சிறிலங்கா அரசு. அத்தனையும் வெற்றியானால் தமிழர்களின் தலைமீது மிளகாய் அரைக்கலாமென ஆவலாக உள்ளது. சிறிலங்கா அரசின் கனவு நனவாகுமா?

இவை எவ்வாறு இருந்தபோதிலும், விடுதலைப் புலிகளின் இராணுவ – அரசியல் நகர்வுகள் சிறிலங்கா அரசின் முழுத்திட்டங்களையும் உடைத்தெறிந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தும் நிலை யிலுள்ளதையே களநிலைமைகள் வெளிப்படுத்துகின்றன.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வானது, தமிழீழ உருவாக்கத்தின் மூலமே சாத்தியமாகும் என்ற அப்பட்டமான, மறுக்கமுடியாத உண்மை தெளிவாகிவரும் இக்கால கட்டத்தில், புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களும் தங்கள் தார்மீகக் கடமைகளிலிருந்து விடுபட முடியாதவர்களாகவே உள்ளனர். விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் சிறிலங்கா அரசின் இராணுவ பலத்துடன் சமநிலை அடைவதற்கான பங்களிப்பும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச நாடுகள் அங்கீகரிக்கக் கோரும் வெகுஜனப் போராட்டப் பங்களிப்புமே, வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களைச் சார்ந்து நிற்கிறது.

இக்கடமைகளை உணர்ந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசியமான காலகட்டம் இதுவாகும். ✳

# புலிகளுக்கு பிரகாசமானதாகிவரும் இராணுவ - அரசியல் சூழ்நிலைகள்

விடுதலைப்புலிகளின் கண்கள் மீண்டும் மலர்ந்துகொள்ள ஆரம்பித்துள்ளன. வடக்கில் யுத்தமுனையில் பெறும் ஆயுதங்களால் அவர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். "ஜெயசுக்குறு" நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு பாரிய இழப்புக்களைத் தொடராக ஏற்படுத்துவதிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இதைவிட– யாழ் குடாநாட்டிலும் புலிகள் பெரும் எண்ணிக்கையில் தற்போது ஊடுருவியுள்ளனர். அங்கு புலிகளின் செயற்பாடுகள் நாளாந்தம் அதிகரித்தே வருகின்றன. இதைவிட கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் பாரிய நிலப்பரப்பு இருக்கின்றது.

அரசியல் களத்தைப் பார்த்தோமானால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையிலான அரசியல் முரண்பாடுகள் விடுதலைப்புலிகளுக்கு சாதகமான நிலைமையை தோற்றுவித்துள்ளன. விடுதலைப்புலிகளுடனான இணக்கப் பாட்டிற்கு ஐக்கியதேசியக் கட்சி அறிவுப்புக்களைப் பகிரங்கமாக விடுத்தும் வருகின்றது. புலிகளின்றி இனப்பிரச்சினைக்கு சாத்தியமான தீர்வு கிடைக்கப் போவதில்லை யென்றும் ஐக்கியதேசியக்கட்சி கூறி வருகின்றது.

இதேவேளை களுத்துறைச் சிறையில் தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டமையானது சர்வதேச அளவில் சிறிலங்கா அரசாங்கத்தை சாட வழிவகுத்திருக்கிறது. முன்னரும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை புலிகளின் பிரச்சாரத்திற்கு வலுச்சேர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாம் இருக்க, இந்தியாவிலும் புலிகளுக்கு ஆதரவான நிலை தோற்றம் பெற்று வருகின்றது. அண்மையில் ஜனதாக் கட்சித் தலைவர் ஜோர்ச் பெர்னாண்டஸ் புதுடில்லியில் கூட்டிய மாநாடு இதனை உறுதிப்படுத்துகின்றது.

> களுத்துறைச் சிறையில் தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டமையானது சர்வதேச அளவில் சிறிலங்கா அரசாங்கத்தை சாட வழிவகுத்திருக்கிறது. முன்னரும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை புலிகளின் பிரச்சாரத்திற்கு வலுச்சேர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் வழமை நிலை திரும்பும் வரையில் எந்த தேர்தலையும் தமிழ்க்கட்சிகள் நிராகரிக்க வேண்டுமெனவும் கோரினர். இடம் பெயர்ந்தோர் அனைவரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்னர், தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவம் விலகிய பின்னரே தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர். விடுதலைப்புலிகளுக்கு எதிரான அமெரிக்க அரசின் தடையும், "கிறீன்பெறற்ஸ்"இன் பயிற்சி வழங்கலும் மாநாட்டில் பங்கேற்றவர்களால் கண்டிக்கப்பட்டது.

டொக்டர்.சதானந்தன், திராவிடர் கழகச் செயலாளர் கே.வீரமணி, தமிழக மார்க்சலிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.வி.பொன்னையன், அவுஸ்திரேலிய மனித உரிமைகள் காப்பு நிறுவனத்தைச் சேர்ந்த மல்கம் ஆர் . கிறசி, பிரான்சைதி தளமாகக் கொண்ட சர்வதேச ஜுரிகள் அமைப்பைச் சேர்ந்த கில்லிஸ் பிகக்குவஸ் ஆகியோர் உட்பட பலர் மாநாட்டில் பேசினர்.

தமிழ்நாட்டை விட்டு இந்தியத் தலைநகரான புதுடில்லியில் இந்த மாநாடு நடத்தப்பட்டமையும், ஜெயின் கமிசனின் அறிக்கை வெளியான காலகட்டத்தில் மாநாடு கூட்டப்பட்டமையும் முக்கியமான விடயங்களாகும்.

இந்திய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதும், விடுதலைப்புலிகளுக்கு நம்பிக்கை தருவதாகவே இருக்கின்றது.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் தனிப் பெரும் கட்சியாக இருந்து, தற்போது வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்காக காத்திருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி, இந்திய தழுவியதான தேர்தல் கூட்டுக்களை அமைத்திருக்கிறது. இதுவே விடுதலைப் புலிகளுக்கு சாதகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜோர்ச் பெர்னான்டஸ் தலைமையிலான சமதாக்கட்சி பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறது. விடுதலைப்புலிகளின் பேரில் மென்போக்கைக் கொண்ட பால்தக்கரேயை தலைவராக கொண்டதும் பம்பாய் மற்றும் மகாராஸ்டிர மாநிலத்தின் பல பகுதிகளிலும் பெரும் ஆதரவைப் பெற்றதுமான "சிவசேனா" வும் பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்துள்ளது. விடுதலைப்புலிகளால் விரும்பப்படும் மாற்றமொன்றும் தெற்கே ஐந்து கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் நிகழ்ந்திருக்கிறது.

அங்கு அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் பாரதீய ஜனதா, வை . கோபால்சாமியின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், டொக்டர் ஆர். ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, டொக்டர் . சுப்பிரமணிய சுவாமியின் ஜனதா கட்சி, வாழப்பாடி ராமமூர்த்தியின் தமிழ் மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றையும் தன்னுடன் சேர்த்திருக்கின்றது.

இவர்களில் சிலர் இன்னும் விடுதலைப் புலிகளின் தீவிர அனுதாபிகளாகவே உள்ளனர். ✳

நன்றி : ஈழநாதம்

www.tamilarangam.net





# களுத்துறை பூட்டிய சிறைப்படுகொலை

கொலைவெறி தலைக்கேறிய நிலையில் – தமிழர்களைப் படுகொலை செய்யும் போது – இனவெறிக் கோசம் எழுப்புவது சிங்களக் காடைத்தனத்தின் ஒருபண்பு.

"எல்லாத் தமிழர்களையும் கொல்லுங்கள்" இது 83 கறுப்பு யூலையில் ஈடுபட்ட பிக்குகளின் கோசம்.

"இந்தக் கண்களா தமிழீழத்தைப் பார்க்கப் போகின்றன" இது வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் போது குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்த சிங்களக் காடையர்களின் ஏளன வெறிக்கோசம்.

இதுபோல 12.12.1997 அன்று களுத்துறைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது கொலைத் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. "ஜயசிக்குறுயில் எங்களது இராணுவம் அழிகின்றது. உங்களுக்கு நாங்கள் உணவு தரவேண்டுமா" என்று வெறிக் கூச்சலிட்டபடி சிங்கள தீங்கியல் (கிறிமினல்) கைதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதுபோன்ற இனக்கொலைத் தாக்குதல்கள் சிங்களக் காடையர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் அல்ல. மாறாக, இவை அதிகார பீடத்தில் திட்டமிடப்பட்ட கொலைத்தாக்குதல்களே ஆகும்.

சிங்கள அரசின் அனுசரணையுடனும் – பேரினவாத அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரிலும் அதிகார பீடத்தின் ஏவுதலுடனும் இப் படுகொலைகள் நடைபெறுகின்றன என்பது ஏற்கனவே நிரூபணமான உண்மை.

களுத்துறைச் சிறையிலும் அதுவே அரங்கேறியுள்ளது.

உரிமைக்காகப் போராடுவது சிங்களப் பேரினவாதத்தால் சகிக் முடியாத ஒரு 'குற்றம்'. போராட்டத்தை ஒடுக்க படுகொலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அதன் உளுத்துப்போன ஒரு தந்திரோபாயம். போராடினால் சாவு, சும்மா இருந்தால் அடிமை வாழ்வு என்பதுதான் தமிழினத்திற்குப் பேரினவாதம் கூற விரும்பும் பாடம்.

களுத்துறைச் சிறைப்படுகொலைக்குப் பின்னாலும் ஒரு சிறைப்போராட்டம் இருந்துள்ளது. போராட்டத்திற்கான காரணி வழமையானதுதான். "விசாரணை செய் அல்லது விடுதலை செய்." 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக தமிழ் அரசியல் கைதிகளால் முன் வைக்கப்பட்டு நடாத்தப்படும் ஒரு சிறைக்கோரிக்கை இது. தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டம் அமுலுக்கு வந்த நாளில் இருந்து, அந்த சட்ட விதிகளுக்கு அமைய, தமிழ் இளைஞர் – யுவதிகளை சிங்கள அரசு சிறையில் அடைத்து வருகின்றது. எந்தவித குற்றங்களுமிழைக்காமல் சிறைக்குள் வாடியபடி இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் முன்வைக்கும் நீதியான – சட்டபூர்வமான – ஒரு மனிதாபிமானக் கோரிக்கைதான் அது. பெரும்பாலும் உண்ணாவிரதம் அல்லது சிறை நடைமுறைகளுக்கு ஒத்துழையாமை என்பன போராட்ட வழிகளாக இருக்கும். இவை தட்டிக்கழிக்கப் படுமிடத்து கூரை மீதேறி சத்தியாக்கிரகம் செய்வது ஒரு உச்ச வழி. ஆனால், சட்டபூர்வ வழியில், இவ்விதம், சிறைப்போராட்டங்கள் நடைபெறும்போது, அதை சிறை உடைப்பு அல்லது தப்பி ஓடும் முயற்சிக்கான சூழ்ச்சித் தந்திரம் என்று காரணங்கூறி தமிழ் அரசியல் கைதிகளை அடித்து – நொருக்கி சிறைப்போராட்டங்களை ஒடுக்க முயல்வது சிறை நிர்வாகத்தின் நடைமுறை.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமது கோரிக்கைகளை வலியுறுத்த – கூரை மீதேறிப் போராட்டம் நடாத்திய தமிழ் இளைஞர்களை தாக்கி கீழே வீழ்த்திவிட்டு களுத்துறைச் சிறைக்குத் தண்டனை இடமாற்றம் செய்தனர். சிறைப் போராட்டத்தை முறியடித்தல் – அரசியல் கைதிகளை மிரட்டல் – செய்திகளை இருட்டடிப்புச் செய்தல் என்பன தண்டனை இடமாற்றத்தின் நோக்கங்கள் எனினும், களுத்துறைச் சிறையிலும் தமிழ் இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இனக் கொலைத் தாக்குதலுக்கான சந்தர்ப்பமாக சிங்கள வெறியர்கள் அதைக் கருதினர். சிறைக்காவலர்கள் மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் நிராயுத பாணிகளாக நின்ற தமிழ் அரசியல் கைதிகள் மீது, கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்கள் கொண்டு தாக்கினர். மூன்று தமிழர்கள் பலியாகினர். 20 பேர் படுகாயமடைந்தனர். இந்தக் கொலைத் தாக்குதலுக்குப் பின்னரும் சிறைப் போராட்டத்தை – தமிழக் கைதிகள்– தொடர்ந்து நடாத்தினர் என்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறப்பம்சம் ஆகும்.

சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடந்த இந்த சிறைப் படுகொலையை "உணவு பரிமாறல் தொடர்பாக கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட சண்டை" என்று சிறீலங்கா நீதித்துறை செய்தித்திரிபு செய்தது.

கொலைஞர் – கொள்ளையர் – பாலியல்குற்றம் புரிந்தோர் – மோசடிப்பேர்வழிகள் என்போரைத் தீங்கியல் குற்றவாளிகள் என்ற வகைக்குள் அடக்கி, அவர்களை அதிகளவு கட்டுப்பாட்டுடன் அடைத்த வைப்பதும் – அதீத கண்காணிப்புடன் நடாத்துவதும் சிறைவழமை. ஆனால், சிறைப் படுகொலைகள் நடைபெறும் வேளைகளில், இவர்கள் ஆயுதப்படையினர் போல சுதந்திரமாக நடமாடி, ஆயுதம் தரித்து தாக்குதலில் ஈடுபடும் அதிசயத்தை சிறீலங்காச் சிறைகளில் காணலாம்.

கோடாரி, கத்தி, மண்வெட்டி போன்ற வேலை ஆயுதங்கள் வைக்கப்படும் ஆயுதக் களஞ்சிய அறை மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். அதன் சாவிகள் பொறுப்பானவர்களின் கைகளிலேயே இருக்கும். வருடத்தின் முழுநாட்களும் சிறை அலுவலர்களிடம் இருக்கும் ஆயுத அறைச்சாவி, சிறைப்படுகொலை நாட்களில் மட்டும் சிங்களத் தீங்கியல் கைதிகளிடம் கைமாறும் அதிசயம் பற்றி – சிறீலங்கா நீதித்துறை – கவலைப்படுவதில்லை.

"தாக்குதல் நடக்க சற்றுமுன்னர் சிறைக்காவலர் பயன்படுத்தும் ஊதுகுழல் சத்தம் கேட்டது" என்றும், "அது தாக்குதலுக்கான சைகை" என்றும் தாக்குதலில் காயமடைந்த தமிழ்க் கைதிகள் தெரிவித்திருந்தனர். ஊதுகுழல் ஒலித்ததும் சுமார் 400 சிங்களத் தீங்கியல் கைதிகள் தமது இருப்பிடம் நோக்கி ஓடிவந்து – வெளிக்கதவை உடைத்து – தம்மைத் தாக்கியதாகவும், பாதுகாப்பு தருமாறு சிறைக் காவலரிடமும் – இராணுவத்திடமும் மன்றாடியும் அவர்கள் பார்த்துக் கொண்டு நின்றனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். வெளிக்கதவை திறக்கவிடாது சுமார் அரைமணி நேரம் தாம் போராடியதாகவும், அவ்வளவு கால அவகாசம் இருந்தும் சிறை நிர்வாகம் எதுவும் செய்யவில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இது சிறை நிர்வாகத்தின் அனுசரணையுடன் நடந்த ஒரு தாக்குதல் நடவடிக்கை என்பதை நிரூபிக்க மேலும் ஆதாரங்கள் தேவையில்லை.

ஆனால், வழமைபோலவே, சிறீலங்கா நீதித்துறை, தாக்குதலின் இனவெறிப் பரிமாணத்தை மறைப்பதற்காக சில தீர்மானங்களை அறிவித்தது. இம்முறை அது பெரும் மனிதன் போல் நடிக்கும் நீதி அமைச்சர் பீரிஸ் தலைமையில் கூடியது. "இனிமேல் சிறைக் கலவரம் ஏற்படாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கலவரத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். அரச செலவில் ஈமக்கிரியைகள் செய்யப்படும்" என்று அறிவித்தது.

"விசாரணை செய் அல்லது விடுதலைசெய் என்று திருவாளர் பீரிசின் சட்ட நேர்மைக்கு – பெரும் மனிதத் தன்மைக்கு சவால் விடுத்த தமிழ் இளைஞர்களை சாவரக்கனிடம் ஒப்புக்கொடுத்துவிட்டு, பிணங்களை எரித்து உதவுகிறோம் – காசு கொடுத்து உதவுகிறோம் என்று அவர் சாதாரணமாக அறிக்கை விடுத்து, கொலைகளை மறைமுகமாக நியாயப்படுத்தியுள்ளார்.

உலக ஒப்புக்காக, ஆட்சியில் இருப்போர் சிலவேளை, இந்தப் படுகொலையைக் கண்டிக்கலாம். சம்பந்தப்பட்ட சிறை அதிகாரிகளுக்கு 'இடமாற்றம்' என்ற தண்டனை வழங்கலாம். தமிழர்களது கொலைகளுக்கு காரணமாக இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சிறீலங்காவில் கொடுக்கப்படும் உயர்ந்தபட்ச தண்டனை 'இடமாற்றம்' தான். அம்பாறை 'சென்றல் காம்ப்' கிராமப் படுகொலையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிக்கும் இடமாற்றம் தான் தண்டனை. சிலவேளைகளில், கொலைக்கான சூத்திரதாரிகளுக்கு பதவி உயர்வும் புகழாரமும் கொடுக்கப்படலாம். இலங்கை வரலாற்றில் இது புதிதல்ல. வெலிக்கடைப் படுகொலைகளுக்கு தலைமை தாங்கியவர்களுள் ஒருவரான சேபால ஏகநாயக்கா என்ற குற்றவாளிக்கு சன்மானமாகத் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டதைப் போல, களுத்துறைச் சிறைப்படுகொலைக்கு தலைமை தாங்கிய சிங்கள தீங்கியல் கைதிகளுக்கு சிலவேளை தண்டனைக் குறைப்பு என்ற ஊக்குவிப்பு வழங்கப்படலாம். எனவேதான், இத்தகைய படுகொலைகளைச் சிங்களக் கைதிகளின் வெறிச் செயல் என்ற மட்டத்துடன் மட்டும் வைத்துப் பார்க்கக் கூடாது. இது அதிகாரபீடத்தின் ஏவுதலின் பேரில் தீங்கியல் கைதிகள் நடாத்திய இனவெறிச் செயலாகும். ஆட்சியாளர்களும், மறைமுகமாக இவற்றை அங்கீகரிக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

சிங்களப் பத்திரிகை உலகமும் களுத்துறை சிறைப்படுகொலையை இருட்டடிப்புச் செய்துள்ளது. சிங்கள மக்கள் எங்காவது கொல்லப்பட்டால் பக்கம் பக்கமாக படங்களுடன் கட்டுரை வெளியிடும் அவைகள், இந்த விடயத்தில் திட்டமிட்டு மௌனம் சாதிக்கின்றன.

தமிழர்கள், கொழும்பில் கொல்லப்பட்டு, வாவிகளில் வீசப்பட்டுக் கிடந்த போதும் அவை மௌனம் சாதித்தன. சிறைகளில் தமிழர்கள் கொல்லப்படும் போது பேசாதிருக்கின்றன. தமிழர் கொல்லப் பட்டால் சம்பவம். சிங்களவர் கொல்லப்பட்டால் சரித்திரம் என்பதுதான் அவற்றின் பத்திரிகாதர்மம்.

இத்தகைய தமிழர் படுகொலைகள் ஒரு விடயத்தையே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகின்றன. அதாவது, சிங்களத்தின் ஆட்சிபீடம் – அதிகார அலகுகள் – தொடர்புசாதன உலகம் அனைத்துமே தமிழின விரோத உணர்வால் ஆட்பட்டுக் கிடக்கின்றன. இதில் எவற்றிடமிருந்தும், தமிழர் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதுதான். அதற்கு களுத்துறைச் சிறைப்படுகொலை ஆகப்பிந்திய உதாரணம். ✳

உரிமைக்காகப் போராடுவது சிங்களப் பேரினவாதத்தால் சகிக்க முடியாத ஒரு "குற்றம்". போராட்டத்தை ஒடுக்க படுகொலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அதன் உளுத்துப்போன ஒரு தந்திரோபாயம். போராடினால் சாவு, சும்மா இருந்தால் அடிமை வாழ்வு என்பதுதான் தமிழினத்திற்குப் பேரினவாதம் கூற விரும்பும் பாடம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூடுவிட்டுக் கூடுபாயும்

தமிழருக்கெதிரான போரிற்கென ஐ. தே. க. அரசாங்கமும் – பொ. ஐ. மு. அரசாங்கமும் இருவேறு போர்முறைத் திட்டங்களை வைத்திருக்கின்றன.

வடக்கைவிட ஐ. தே. கட்சியினர், கிழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். கிழக்கை முதலில் வெற்றிகொண்டு அதை சிங்களவர் பகுதியாக மாற்ற ஆசைப்பட்டனர். குடியேற்றத்திற்கு வாய்ப்பான நிலவளமும் – மற்றும் – தமிழருக்குச் சொந்தமான நீண்டகடல் எல்லையை அபகரிக்கும் கனவும் அவர்களின் ஆசைக்கு அத்திவாரமாக இருந்தன.

> வடக்கைவிட ஐ. தே. கட்சியினர், கிழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். கிழக்கை முதலில் வெற்றிகொண்டு அதை சிங்களவர் பகுதியாக மாற்ற ஆசைப்பட்டனர். குடியேற்றத்திற்கு வாய்ப்பான நிலவளமும் – மற்றும் – தமிழருக்குச் சொந்தமான நீண்டகடல் எல்லையை அபகரிக்கும் கனவும் அவர்களின் ஆசைக்கு அத்தி வாரமாக இருந்தன.

அத்துடன், கண்டி இராச்சியத்தின் பகுதியாகவே கிழக்கு இருந்தது என்ற பேரினவாதிகளின் உரிமை கோரலும் கிழக்கிற்கு – முன்னுரிமை கொடுக்க ஐ. தே. கட்சியினரைத் தூண்டியிருக்கலாம்.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் ஈழப் போர்க்காலத்தில் – தமிழினப் படுகொலை – கிழக்கிலேயே தீவிரமான முறையில் நடைபெற்றதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதே.

இதேசமயம், கிழக்கைவிட பொ. ஐ. மு அரசாங்கத்தின் போர்முறைத்திட்டம் வடக்கிற்கே அதிக முன்னுரிமை கொடுத்தது. தமிழர் போராட்டத்தின் உயிர்நாடி வடக்கில் இருக்கின்றது! என்று அது கருதுகின்றது. எனவே, வடக்கை முழுமையாக ஆக்கிரமித்து, உயிரைப் பிடுங்கி எறிந்து, போராட்டத்தைக் கொல்ல – அது எத்தனிக்கின்றது. இது வெற்றிகரமாக நடந்தால் ஒரு அணிநடைபோல நடந்து, கிழக்கை அடிமைகொள்ளலாம் என்று அது கணித்து வைத்திருக்கின்றது.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கியதும், அதாவது பொ. ஐ. முன்னணி அரசின் போர் தொடங்கியதும், கிழக்கில் பல படை முகாம்களை மூடி – அந்தத் துருப்புக்களை வடக்கிற்குக் கப்பலேற்றியது. அதையே தொடர்ந்தும் செய்து வருகின்றது.

ஜயசிக்குறுய் நடவடிக்கைக்கு இன்று ஏற்பட்டுள்ள ஆட் பற்றாக்குறையை நீக்க, மீண்டும் கிழக்கில் இருந்து

## இராணுவ பூதம்

துருப்புக்களை எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மைக் காலங்களில் – சிறிதும் பெரிதுமாக – 44 படைமுகாம்களை – கிழக்கில் மூடியுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதனால் சுமார் 2300 ச. கி. மீ பரப்பளவு நிலப்பகுதி ஆக்கிரமிப்பு அகன்ற பிரதேசமாக மாறியுள்ளது என்றும், இதில் கணிசமான பகுதி நிலம் கடற்கரையோரப் பகுதிகள் என்றும் அந்தச் செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கிழக்கில் இருந்தும் – தெற்கில் இருந்தும் துருப்புக்களை நகர்த்திவிட்டாலும், ஜயசிக்குறுயின் ஆட் தேவைப்பசி தீர்ந்துவிடப் போவதில்லை. இதனால், பல்வேறு பாதக விளைவுகளையும் அரசாங்கம் சந்திக்கப் போவது நிச்சயம். பொ. ஐ. மு அரசாங்கத்தின் போர் முறைத் திட்டம் மாதன முத்த கதைபோலவே முடியப் போகின்றது. ✳

---

# வன்னி இராணுவக் கட்டுபாடற்ற பிரதேசத்தில்......

ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும் இற்றைவரை அனுமதி கிடைக்கவில்லை. மன்னார் மாவட்டத்திற்கு 408 பரல் அனுமதிக்கப்பட்டுள்ளது. வவுனியாவுக்கு அனுமதிப்பதாகக் கூறிவருகின்றார்கள்.

### உணவுத்தொடர் வண்டி நடைமுறை

இந்த இடத்திலே உணவுத் தொடர் வண்டிகள் அல்லது ஏனைய பொருட்கள் அனுப்புவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறைபற்றி எடுத்துக் கூறுவது பலருக்கும் பிரயோசனமாக இருக்கும். அனுப்பப்படும் சகல பொருட்களும் வவுனியாவில் இருந்து பறையனாலங்குளம் வரை ஒரு தொகுதி லொறிகளில் ஏற்றி அனுப்பப்பட்டு அந்நிலையத்தில் இறக்கி இராணுவக்கட்டுப்பாடு அற்ற பகுதியில்வரும் லொறிகளில் ஏற்றி அனுப்பப்படுகின்றன. ஒவ்வொருமாத ஆரம்பத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமென அனுப்பப்பட வேண்டிய லொறிகளின் அளவு, ஏனைய மூன்று மாவட்டத்திற்குமென அனுப்பப்பட வேண்டிய லொறிகளின் அளவு ஏனைய மூன்று மாவட்ட அரசாங்க அதிபர்களோடு தொடர்பு கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறு தீர்மானித்த பின்பு மாவட்டங்களுக்கு குறித்த திகதிகள் ஒதுக்கப்படுகின்றன. அத்திகதிகளுக்கு அமைவாக வவுனியாவிலுள்ள சம்பத்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதி பொருட்களை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்வார். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அனுப்புகின்ற பொருட்களுக்குரிய கட்டளையை நேரடியாக அலுவலகர் ஒருவர் கொழும்புக்குச் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும். தடைசெய்யப்பட்ட பொருட்களாயின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினூடாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் பெறப்பட வேண்டும். அனுமதிகள் பெறப்பட்ட பின்னர் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. வாகனத் தொடர் வண்டி அனுப்புவதற்கு முன்பாக பொருட்களை அனுப்பும் லொறிகளின் விபரம் பட்டியல் படுத்தப்பட்டு வவுனியா இணைப்பதிகாரியிடம் அனுமதி பெறப்பட வேண்டும். தற்பொழுது தொடர்வண்டி அனுப்புகின்ற பணி வவுனியா ப.நோ.கூ சங்கம் விண்ணப்பிக்குமிடத்து பொருட்களை அனுப்பும் லொறிகளை வவுனியாவில் உள்ள பாரவூர்திச் சங்கம் விடுவிக்க வேண்டும்.

### வானொலிச் செய்தி

ஒவ்வொரு நாளும் அனுப்பப்படுகின்ற பொருட்கள் பட்டியல் படுத்தப்பட்டு லொறிகளை அனுப்புவதற்குரிய அனுமதி கிடைத்தவுடன் குறிப்பிட்ட தொகை லொறிகளை, பொருட்களை மாற்றி ஏற்றுகின்ற பறையனாலங்குளம் நிலையத்திற்கு அனுப்புமாறு இராணுவக்கட்டுப்பாடு அற்ற பிரதேசத்தில் இயங்குகின்ற பாரவூர்திகள் சங்கத்திற்கு 48 மணிநேர அவகாசத்துடன் வானொலிச் செய்தியொன்று கொடுக்கப்பட வேண்டும். இவ் வானொலிச் செய்தி எனது அலுவலகத்தின் மூலம், வவுனியா யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தினூடாக மடு உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படுகின்றது. இச் செய்தியை பாரவூர்தி சங்கப் பிரதிநிதி மடு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்வார்.

அத்தோடு பறையனாலங்குளம் ஏற்றியிறக்கும் நிலையத்துக்குரிய சம்பத்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதி ஒருவர் வருகின்ற லொறிகளின் பட்டியலுடன் மடு ரோட் சந்தியிலுள்ள இராணுவ பரிசோதனை நிலையத்திற்கு லொறிகளைக் கொண்டுவந்து ஒப்படைப்பார்கள். அந்த லொறிகள் மடு ரோட் பரிசோதனை இராணுவத்தினால் பரிசோதனை செய்யப்பட்டு உள்ளே வர அனுமதிக்கப்படுகின்றன. உள்ளே வந்த லொறிகளில் வவுனியாவில் இருந்து பறையனாலங்குளம் கொண்டுசெல்லும் பொருட்கள் இறக்கியேற்றப்படுகின்றன.

எனவே, ஒரு லொறியில் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு வவுனியாவில் உள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதி, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், வவுனியா இணைப்பதிகாரி அலுவலகம், வவுனியா ப.நோ.கூ சங்கம், வவுனியா யூ.என்.எச்.சி.ஆர் அலுவலகம், மடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலுள்ள பாரவூர்திச் சங்கம், பறையனாலங்குளத்தில் ஏற்றியிறக்கும் பயணிகளை மேற்பார்வை செய்யும் செட்டிக்குளம் இராணுவ இணைப்பதிகாரி அலுவலகம் என்பவற்றுடன் எமது அலுவலகம் இணைப்பாளராகக் கடமையாற்ற வேண்டியுள்ளது.

பொருட்களை அனுப்புவதற்குரிய போக்குவரத்து கொடுப்பனவுகளும் எமது அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதை விட நிவாரணப் பொருட்களை அனுப்பும் பணிகளுக்குப் பொறுப்பாக இருக்கும் உதவி தேர்தல் ஆணையாளர், பொருட்களை அனுப்புவதற்கு சம்பத்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

### அலுவலகம் தினமும் இயங்கவேண்டிய அவசியம்

ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய சகல தினங்களிலும் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதால் எமது அலுவலகம் மூடப்படாது வருடத்தில் ஒவ்வொரு நாளும் வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது. சங்கிலித் தொடர் போன்று அமைந்துள்ள இந்த நடவடிக்கைகளில் ஒரு இடத்தில் தொடர் அறுந்துவிட்டால், தொடர் வண்டிகளை அனுப்ப முடியாது. ப.நோ.கூ சங்கங்களும் இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். மேலும் பாதைச் சீர்கேடு, பொருட்கள் தட்டுப்பாடு, கடுமையான மழை, பாதைகளின் பாதுகாப்பு நிலைவரம், மோதல்நிலை போன்ற பலவிதமான இடையூறுகளை எதிர்நோக்கியுள்ள போதிலும் பொருட்களை அனுப்புவதற்குப் பொறுப்பாக இருக்கின்ற மேலதிக அரசாங்க அதிபர், நிவாரண ஒருங்கிணைப்பாளர், அரசாங்க அதிபர்களின் பிரதிநிதிகள், வவுனியா ப.நோ.கூ சங்கம், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் செயற்படும் உத்தியோகத்தர்கள் குறிப்பாக பாரவூர்திகள் சங்க அங்கத்தினர்கள் செயற்படும் விதம் பாராட்டுக்குரியதாகும்.

இந்நடைமுறைகளை நன்கு அறியாத சிலர் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதன் மூலமோ அல்லது பரிபூரணமாகச் சரியான தகவல்கள் இன்றி எழுதுவதன் மூலமோ திருப்திகாண முயற்சிப்பது வருந்தத் தக்கதாகும். தற்போது 500 லொறிகள் வரை செல்கின்றன. 1998 ஜனவரி மாதத்தில் இருந்து மாதாந்தம் 800 லொறிகளையாவது அனுமதிப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். இன்றைய சூழ்நிலையில் மக்கள் சேவையே மகேசன் சேவையென மதித்துச் செயற்படும் அனைவருக்கும் என்னுடைய இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஸ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். ✳

www.tamilarangam.net



# தேசம் விடியும் தமிழீழம் மலரும்! சுதந்திரக்காற்று சுகமாக வீசும்!

"நாய் வாலை நிமிர்த்த முடியாது" என்பது பழமொழி. "சிங்கள பௌத்த இனவாதிகளை திருத்த முடியாது" என்பது புதுமொழி.

களுத்துறை சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்களின் பச்சை இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. மூன்று தமிழ் இளைஞர்கள் அடித்துக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஏழுபேர் படுகாய ங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கொலைகள், 1983ஆம் ஆண்டு கறுப்பு யூலையை அப்படியே அச்சொட்டாக நினைவுபடுத்த வைத்திரு க்கிறது.

கறுப்பு யூலையில் நடந்ததுபோலவே இந்தக் கொலைகளை சிறைச்சாலைச் சிங்களக் கைதிகள் செய்து முடித் திருக்கிறார்கள்.

அதுவும் - முன்கூட்டியே திட்ட மிட்டு நிறைவேற்றப்பட்ட கொலைகள். இதுவும் - அப்படித்தான்.

அப்போதும் பொலிஸ், இராணுவம் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இப்போதும், பொலிசும் இராணுவமும் -அதேபோல கைகட்டி வேடிக்கை பார்த் துக்கொண்டு வாழாதிருந்திருக்கிறது.

சிறிலங்காவில் எந்தத் தமிழனுக்கும் பாதுகாப்பு இல்லை. வீட்டிலும் சரி, வீதியிலும் சரி, சிறைச்சாலையிலும் சரி, வேறு எங்கிலும் சரி தமிழனுக்குப் பாதுகாப்புக் கிடையாது. ஆட்சிகள் மாறலாம். ஆனால் காட்சிகள் மாறாது.

**ஜே. ஆர் போய், பிரேமதாசா வரலாம். பிரேமதாசா போய், சந்திரிகா குமாரணதுங்கா ஆட்சிக்கு வரலாம். ஆனால் கொலைகள், பாலியல் வன்முறைகள், காணாமற்போதல், சிறை, சித்திரவதை தொடர்ந்த வண்ணம் இருக்கும் – மாறவே மாறாது. காரணம், எல்லாச் சிங்கள அரசியல்வாதிகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.**

ஜே. ஆர் போய், பிரேமதாசா வரலாம். பிரேமதாசா போய், சந்திரிகா குமாரண துங்கா ஆட்சிக்கு வரலாம்.

ஆனால் கொலைகள், பாலியல் வன்முறைகள், காணாமற்போதல், சிறை, சித்திரவதை தொடர்ந்த வண்ணம் இருக்கும் – மாறவே மாறாது. காரணம், எல்லாச் சிங்கள அரசியல் வாதிகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

சிங்கள அரசியல்வாதிகள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அப்பட்டமான சிங்கள- பௌத்த இனவாதத்தை அங்கிங்கு என்னாதபடி எங்கும் நீக்கமற விதைத்து, நீர்பாச்சி; அறுவடை செய்து வருகிறார்கள்.

"தினையை விதைத்தால் தினையை அறுவடை செய்யலாம். வினையை விதைத்தால் வினையைத்தான் அறுவடை செய்ய வேண்டும்."

முழுப் பூசினிக்காயை சோற்றுக்குள் புதைத்தவன் கதைமாதிரி, களுத்துறை சிறைச்சாலையில் பட்டப்பகலில் மாலை இரண்டு மணிக்கு (12-12-97) தமிழ் அரசியல் கைதிகள் மீது நடாத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலையும் தாக்குதலின் விளைவாக இடம்பெற்ற கொலைகளையும் சிறைச்சாலையின் சிங்கள ஆணையாளர் எஸ். கரலியட்ட (S. Karaliyadde), அப்படிச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லையென்று மறுத்திருக்கிறார்.

இந்தத் தாக்குதல்களையும் கொலை களையும் கண்டித்து, சர்வதேச மன்னிப்புச் சபை காட்டமான கடிதமொன்றை எழுதியுள்ளது.

மூன்று தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதையிட்டு சிறிலங்கா அரசு பாரபட்சமற்ற நீதி விசாரணை மேற்கொள்ள வேண்டு மென்று மன்னிப்புச்சபை கேட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகளது பாதுகாப்பு பற்றியும் கவலை தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் பீரிசுக்கு வரைந்துள்ள கடிதத்தில், மன்னிப்புச்சபை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

"Prison staff and army personnel deployed at the prison appear to have failed to take measure to protect the Tamil detainas at the time according to some reports were even actively involved in the attack which lasted more than an hour..."

சிறைச்சாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை ஊழியர் களும் இராணுவத்தினரும் தமிழ் தடுப்புக் கைதிகளை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டார்கள். அதுமட்டுமல்ல கிடைக்கப் பெறும் தகவல்களின்படி, ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகத் தொட ர்ந்து இடம்பெற்ற தாக்குதலில் அவர்களும் கச்சிதமாக கலந்து கொண்டார்கள்.

நீதியமைச்சர் பீரிஸ்தான் சிறைச சாலைக்குப் பொறுப்பான அமைச்சர். வேறு ஒரு நாட்டில் இப்படியொரு கோழைத்தனமான படுகொலை நடந்திருந்தால், சிறைச்சாலைக்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலகி இருப்பார் அல்லது பதவி விலகும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டிருப்பார்.

இரண்டாண்டுகளுக்கு முன் டென் மார்க் அமைச்சர் ஒருவர் தமிழ்க் கைதிகள் பற்றி பாராளுமன்றத்தில் பிழையான தகவல்கள் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் அமைச்சர் மட்டுமல்ல, முழு அமைச்சரவையே பதவி விலகியது. ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

ஆனால், சிறிலங்கா டென்மார்க் அல்ல என்பது தெரியும். சிறிலங்கா புத்தபிரான் மூன்று முறை கால்பதித்த புண்ணிய பூமி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக புத்தரின் போதனையில் ஊறிப் போன தேசம். "புத்தம் சரணம் கச்சாமி" "தர்மம் சரணம் கச்சாமி" "சங்கம் சரணம் கச்சாமி" என்ற மும்மணியின் ஓசை கேட்கும் புனித



நாடு. இத்தகைய தகைமைகள் நிறைந்த நாட்டில் அமைச்சராவது பதவி விலகுவதாவது.

அது அன்றும் நடைபெறவில்லை. இன்றும் நடைபெறவில்லை. இனி என்றும் நடைபெறப் போவதில்லை.

கொலை செய்தவர்களுக்கு பரிசும், கொலை செய்ய உடந்தையாக இருந்தவர்களுக்கு பதவி உயர்வும் கொடுக்காமல் விட்டாலே பெரிய அதிசயம்.

1983இல் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளது குடும்பங்களுக்கு 'மன்னிக்க வேண்டும்' என்று ஒரு வார்த்தை இதுகாலவரை உச்சரிக்கப்படவில்லை.

அந்தக் குடும்பங்களுக்கு இழப்பீடாக ஒரு சதமேனும் கொடுக்கப்படவில்லை.

கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை இல்லை. கொலைச்சம்பவம் - கண்துடைப்புக்குக் கூட விசாரணை இல்லை.

கொலைக்கு உடந்தையாக இருந்த ஊழியர்கள் தண்டிக்கப்படவில்லை.

களுத்துறைச் சிறைச்சாலை கொலைகள் பற்றி நடாத்தப்பட்ட நீதிபதி விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்த தமிழ்க் கைதிகள், உயிர்தப்பிய கைதிகள் சாட்சியம் அளிக்க மறுத்திருக்கிறார்கள்.

தங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத காரணத்தால்- தங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்ற அச்சம் காரணமாக - தமிழ் அரசியற் கைதிகள் சாட்சியம் அளிக்க மறுத்துள்ளார்கள். இதனை மன்னிப்புச் சபை, நீதி அமைச்சர் பீரிஸ்க்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்கார்ட்டி உள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலை படுகொலையைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகள் டிசெம்பர் 13ஆம் நாள் ஒரு சிறப்பு அறிக்கை விட்டிருக்கின்றார்கள். அதன் முக்கியத் துவம் கருதி அதனை முழுமையாகக் கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்:

"The premeditated attack on Tamil political prisoners within four walls of the Kalutura Jail on the 12th, and the murder of three of them is not just and act of barbarity on the part of Sinhala convicits. The connivance in the murder by jail guards and prison authorities, the presence of murderous weapons like swords within a jail, the initial attempt by the prison administration to deny the happening, are all symptomatic of the impunity with which racist attacks on Tamils happen under the rule of the Chandrika government.

The LTTE unreservedly condemns this act and calls upon all governments and non governmental organisations around the world concerned with human rights to lodge their protest with the Sri Lanka government."

"களுத்துறைச் சிறைச்சாலையின் நாலு சுவர்களுக்குள்ளே 'டிசெம்பர் 12ஆம் நாள்' தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக திட்டமிட்டு, நடாத்தப்பட்ட தாக்குதலும் அதன்போது மூன்றுபேர் கொல்லப்பட்டதும் வெறு மனே சிங்கள கைதிகளது காட்டுமிராண்டித்தனமான செயல் என்று சொல்லிவிடமுடியாது. இந்தப் படு கொலைக்கு சிறைச்சாலை சிறைக் காவலர்களும் சிறை அதிகாரிக ளும் உடந்தையாக இருந்ததும் சிறைச் சாலையில் வாள் போன்ற கொலை ஆயுதங்கள் இருந்ததும் இப்படியான தொரு சம்பவம் நடைபெறவே இல்லையென்று சிறை நிர்வாகம் மறுக்க எத்தனித்ததும் சந்திரிகா அரசினால் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் இனவாத தாக்குதல்களின் அறிகுறியாகவே கொள்ள வேண்டும்"

**நக்கீரன்**

வரலாறு காணாத துன்பங்களை, துயரங்களை, இராணுவ அடக்கு முறையை, பசியை, பட்டினியை, பிணியைக் கடந்த மூன்று ஆண்டுகால சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் தமிழ் மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

தமிழர்களின் உயிருக்கு ஒரு சத மதிப்பேனும் இல்லாதுபோய்விட்டது.

இந்த உண்மைகளைத் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன், தனது மாவீரர் நினைவுநாள் உரையில் மிகுந்த மனவேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

"சிங்களத்தின் ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சிக் காலம்தான் தமிழினத்திற்கு சாபக்கேடாக அமைந்தது. இந்த மூன்று ஆண்டு காலத்தில் அவலத்திற்கும் இம்சைக்கும் ஆளாகாத தமிழர்களே இல்லை எனலாம். சந்திரிகாவின் ஆட்சியில்தான் போர் விரிவடைந்தது - பெரும் தீயாகப் பரவி

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

www.tamilarangam.net



# விபரீத அவலம் நிரம்பிய விசித்திரக் கதை

சந்தேகமேயில்லை; சந்திரிகா அம்மையார் அடுத்த நூற்றாண்டிற்கு சிங்களவரை அழைத்துச் செல்லவே பிறப்பெடுத்தவர் என்பதில் இன்று எவருக்கும் எள்ளளவும் சந்தேகமேயில்லை. Cyperspace எனப்படும் அறிவியல் மாய உலகிற்குள் இவ்வுலகம் பயணிக்கும் காலகட்டத்தில், அம்மையார் சிங்களவரை வேறொரு மாய உலகிற்குள் தள்ளிவிட முனைகின்றார். மனிதரின் சிந்திக்கும் ஆற்றலின் மையமான மூளையின் நரம்புத் தொகுதியை இணைக்கப்படுத்தி அறிவியல் வல்லுனர்கள் இதனைச் சாதிக்கையில், சந்திரிகா அம்மையார் சிங்களவரின் சிந்திக்கும் ஆற்றலை இலக்கு வைத்து தாக்கி – அதனை மழுங்கடித்து, இருண்மையும் பொய்மையும் நிரம்பிய மாய உலகிற்கு இட்டுச் செல்கின்றார்.

அந்த உலகத்தில் புலிகள் இல்லை; போரில்லை; இனச்சிக்கலில்லை; அம்மையார் கொடுத்த வாக்குறுதிகள் பற்றி கேட்பாரில்லை; மொத்தத்தில் சிறிலங்கா, சிங்கப்பூர் போலவும் சிங்களவர்கள் தேவர்கள் ஆகவும் வாழும் உலகமிது. இதற்காக அம்மையார் செய்வது ஒன்றே ஒன்றுதான். உண்மையைப்போல தோற்றமளிக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு அவ்வப்போது பொருத்தமான – முற்றிலும் முரண்பட்ட குழப்பகரமானதாக வடிவமைக்கப்பட்ட அறிக்கைகளை வெளியிடுவதுதான் அவரது பணி. இவ்வறிக்கைகளை தயாரிக்க இரவு பகலாக முழுமூச்சாக நீலன், கதிர்காமர், பீரிஸ் தலைமையிலான வல்லுனர் குழுவொன்று இயங்கிக்கொண்டிருக்கிறது. புலிகளோடு பேசி போரை நிறுத்துவேன் என முன்னர் கூறத் தொடங்கிய காலம் தொட்டு இன்றுவரை அவர் செய்தது, செய்வது, செய்யப்போவது இது ஒன்றேதான். இதன் விளைவு என்னவென்றால், சிந்திக்கும் ஆற்றலை அடகு வைத்த சிங்களவர், எப்போதுமே அம்மையாரின் அடுத்த அதிகார அறிவிப்புக்காக காத்து நிற்குமொரு உளவியல் சிக்கலில் சிக்குப்பட்டமைதான்.

ஆனால், இங்குள்ள விபரீத அவலம் என்னவென்றால், அம்மையாரின் சுண்டு விரலிலே குந்தியிருக்கும் தமிழ்க் குழுக்கள் அம்மையாரின் அடுத்த அறிக்கைக்காக காத்து நிற்பதோடு நின்றுவிடாமல் தாங்களும் தம் பங்கிற்கு அறிக்கைகள் விட ஆரம்பித்துவிட்டமைதான். அதிவிவேக பூரணகுருவும் அவரது மூடச் சீடரும் போலாகிவிட்டது இக்கதை. போரிலிருந்து பொருண்மியம் வரை பொதியிலிருந்து பொதுமக்கள் ஆதரவு வரை எல்லாமே ஏறுக்கு மாறாகி தேக்க நிலையில் தேங்கிய பின், அம்மையார் இப்போது அடுத்த அதிரடி அறிவிப்பை அவிழ்த்து விட்டுள்ளார். யாழ் மாநகரசபை உள்ளிட்ட 17

**-வே.பாலகுமாரன் (தமிழீழம்)**

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என்பதுதான் அது. எப்படிப்பட்டதொரு அறிவிப்பிது?

மிக நீண்டகாலமாகவே செய்வதறியாது திகைத்து நின்ற தமிழ்க் குழுக்களெல்லாம் இதையடுத்து உயிர்ப்புப் பெற்றன. அடுத்தடுத்து தமிழ் மக்களை சிந்திக்கவே நேரமில்லாத அளவிற்கு அடுக்கடுக்காக அறிக்கைகளை வெளியிட்டன. "இந்த நிலையில் தேர்தல் ஒரு கேடா?" என்றது ஒரு குழு. "இத்தேர்தல் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்டதொன்று" என்றது இன்னுமொரு குழு. இதன் பின்தான் உச்சக்கட்ட அறிக்கை எல்லோரதும் ஏகோபித்த அறிக்கையாக வெளிவந்தது. "தேர்தல்களை தள்ளிப் போடுமாறு கேட்டுள்ளோம். ஆனால், அரசு தள்ளிப்போடாது என்பது ஏற்கனவே எமக்குத் தெரியும். எனவே தேர்தல்களில் நிற்கின்றோம்." இவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்ட அறிக்கையொன்றை இன்னொரு தமிழ்க்குழு இறுதியாக வெளியிட்டது. "......திசை தெரியாது. ஐக்கியப்பட்ட இலங்கைக்காக தமிழ் பேசும் மக்கள் தாயகத்தை தாரைவார்க்கக் கூட இவர்கள் (ஏனைய தமிழ்க்குழுக்கள்) தயாராகிவிட்டனர். தமிழ் தேசிய இனத்தின் பறிக்கப்பட்ட தேசிய உரிமைகளை தாபிப்பதற்கு யாழ்.குடா உள்ளூராட்சி தேர்தல்களில் கலந்து கொள்வது தவிர்க்க முடியாத (?) அரசியல் போராட்டம் (?) என்பதனை அதன் சகல பரிமாணங்களிலும் (?) நம்புகின்றோம். மாநில சுயாட்சியை வழங்க முன்வராத, மரபுவழி தாயகத்தைக் கூறுபோட முனையும் அரசின் பொதியை நிராகரிக்க, அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க – இவற்றினை முழு உலகிற்கும் அறிவிக்கும் ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பாக (?) இத்தேர்தலை கணிக்குமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொள்கின்றோம்." இப்போது சொல்லுங்கள்; அம்மையாரையும் மிஞ்சி விட்டார்களல்லவா இவர்கள். ஆனால், இவர்களுக்கு இவ்வித்தையைக் கற்றுக் கொடுத்த அம்மையார் எப்படிப்பட்டவர்? அம்மையாரின் பாரிய ஏமாற்று அரசியல் சதித்திட்டத்தின் ஒருபகுதியே இவர்களல்லவா?



தற்போது நான்கு இலட்சம் மக்கள் வாழும் யாழ்குடாவில் வாக்காளர் 5,64,021 பேராம். இதில் புதிதாக மேலும் 24,000 பேர் சேர்க்கப் பட்டிருக்கின்றார்களாம்; எப்படியிருக்கின்றது கதை? மோசடிகளில் கைதேர்ந்த ஐ.தே. கட்சியே வாக்காளர் இடாப்புக்களை நம்ப முடியாது என்கின்றது.

எனவே இத் தேர்தலை 'எவ்வித மேனும்' நடத்தி முடித்த பின்னர் அம்மையார் உலகிற்கு கூற உத்தேசித்திருப்பது என்ன? அதை இப்போதே எவராலும் கூற முடியும். யாழ்குடாவில் காணாமல் போன 700 பேரும் உண்மையிலே காணாமற் போகவில்லை என்பதை யாழ்மக்களே ஏற்றுக் கொண்டு விட்டனர்; தனது தீர்வுப் பொதியை மட்டுமல்லாது அதனை நிறைவேற்ற வக்கில்லாது முடிவில்லாது இழுத்தடிப்பதைக் கூட தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டனர். தமிழர்களுக்கு எதிராக மிகப்பாரிய அளவில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புப் போரை, தம்மை "விடுவிப்பதற்கான போர்" என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இவற்றினை விடவும் இன்னொரு அதிரடி அறிவிப்பையும் பிரகடனப்படுத்த அவர் தயாராக இருக்கின்றார். தமிழ் பேசும் மக்களின் விடிவின் சுடரொளியாக விடுதலை உணர்வின் வீறு கொண்ட வடிவமாகிவிட்ட புலிகளின் தலைமை, எப்போதோ தமிழ் மக்களின் தலைமையை பொறுப்பேற்றுவிட்ட நிலையில், அத் தலைமையை இராணுவ ரீதியில் அழிக்க முடியாத நிலையில், அரசியல் ரீதியாக தலைமையை புறம் தள்ளவே இப்பிரகடனம். அரசியல் அடைமொழியில் மிதவாதிகள் எனப்படும் சமரசவாதிகளைக் கொண்ட மாற்றுத் தலைமையொன்று தமிழர் மத்தியில் உருவாகிவிட்டது என்பதைக் காட்டவே, இத் தேர்தல் முழுமையாக பயன்படும் என அம்மையார் நம்புகின்றார். இரண்டாம் உலகப் போரின் போது கிட்லர் காட்டிய பாதையிது. தென் பிரான்சை அப்போது ஆக்கிரமித்த ஹிட்லர் அதனை நிருவகிப்பதற்காக பொம்மை அரசொன்றை விசீ (Vichy) நகரில் அமைத்தான். பிரான்சு பிரான்சியராலே நிருவகிக்கப்படுவது போன்ற பொய்மைத் தோற்றத்தை உருவாக்கவே இத்திட்டம். இன்று வரலாற்று அகராதியில் "விசீ" அரசாங்கம் என்றால் ஏவல் நாய்களின் – எடுபிடிகளின் பொம்மலாட்ட அரசு என்றே பொருள்படும்.

இத்தகைய அரசியல் சடுகுடுக்கள், வாரோட்டங்கள் எப்படியிருந்தாலும் இத்தேர்தல் அறிவிப்பானது, எம் மக்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கும் பேருண்மையொன்றை புலப்படுத்தி நிற்கின்றது. வரலாற்றின் தீர்க்கமான பக்கங்களில் எம் மக்கள் கால்பதிக்கின்றனர். அவர்களது தேசிய விடுதலைப் போராட்டம் தீர்க்கமான திருப்பு முனையொன்றை நோக்கி பயணிக்கின்றது என்பதனை உணர்ந்து, உலகமே உற்று நோக்குகையில் வரலாறு ஒரு அற்புதமான சமன்பாட்டை முன் வைக்கின்றது. தமிழ் மக்களை ஏமாற்ற சிங்களத் தரப்பினர் இதுவரை எடுத்த சகல முயற்சிகளும் முற்றுப்பெறும் காலகட்டத்தில், மிதவாதம் என்கிற பெயரில் சமரசவாத – துரோகத்தன அரசியலின் முழுவட்டமும் இப்போது பூரணமாக்கப்படுகின்றது.

ஏனெனில் 1970களின் பின்னர் சிங்களத்தின் சீரழிந்த அரசியல் சேற்றில் இருந்து தம்மை விடுவிக்கும் பணியைத் தொடங்கினர் எம் மக்கள். 1972ம் ஆண்டு புதிய அரசியல் திட்ட புறக்கணிப்போடு தொடர்ந்த இப்பணி, சிங்கள அரசுகளால் வீசியெறியப்படும் எச்சில் எலும்புத் துண்டான தேர்தல் வழி பதவியாசை மோகங்களை கைவிட்டு தம்மை நிலை நிறுத்தும் வரை தொடர்ந்தது. 1974 ஜனவரி பத்தாம் நாள் தமிழாராட்சிப் படுகொலைகட்கு பின்னணியில் செயற்பட்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வட மாகாண அமைப்பாளராகி, துரோகத்தனத்திற்குப் பரிசாக யாழ் மாநகரசபை மேயரான அல்பிரட் துரையப்பாவின் கணக்கு தீர்க்கப்பட்ட போது, தரைக்கும் வானத்திற்கும் எம்பிக் குதித்தவர் எம் மக்கள். 1983ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்களை வடக்கில் நடத்த ஐ. தே. கட்சி முடிவெடுத்தபோது, ஓடோடிச் சென்று அதற்கு முண்டு கொடுக்க தமிழர் விடுதலைக் கூட்டணி முயன்றபோது, இவர்கள் யாவருக்கும் பட்டை நாமம் போட்டு எம்மக்களில் 95 விழுக்காட்டினர் அத் தேர்தல்களைப் புறக்கணித்தனர். அன்றோடு மிதவாத அரசியல் முடிவிற்கு வந்தது – வரலாறு திருத்தியெழுதப்பட்டது.

ஆனால், இன்று அதே யாழ் மாநகரசபை மேயருக்காக, அதே உள்ளூராட்சி மன்றக் கதிரைகளுக்காக தமக்குள்ளே முட்டி மோதி போட்டி போடுகின்றவர்கள் யார்? இந்த விசித்திர விபரீத அரசியலின் முடிவு எவ்வாறிருக்கப் போகின்றது? ஆனால், "தமக்கு முன்னிருந்த ஆசியாவின் மிகப்பலம் வாய்ந்த கரந்துறைப்படைகள் போல, முடிவற்ற பொறுமை யுடன்" (நியூஸ் வீக் 08.12.97 ரொனி கிளிங்டன்) காத்திருக்கும் புலிகள் முன் இத்தகைய முயற்சிகள், "வீம்பு முற்றிய சாத்தானின் மீளவழி ஏதுமற்ற" செயற்பாடுகள் அல்லவா? இவை இவ்வாறுதான் முடிவிற்கு வரும் என்பது எவ்வாறோ எமக்குத் தெரிந்த விடயமும் அல்லவா? ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னிப் போர்க்கள நிலைமை!

## எதிர்வு கூறல்களா?

## அடிமன ஆசைகளா?



"இதற்குமுன் முடிந்துவிடும்", "அதற்கு முன் முடிந்துவிடும்" என்று சிங்களத் தளபதிகள் கூறிய பல்வேறு காலக் கெடுக்களையும் தாண்டி 'ஜயசிக்குறுய்' தொடர்கின்றது. 200ஆவது நாள் நிறைவையும் அது கண்டுவிட்டது. இப்போது, ரத்வத்த அவர்கள், மாசி மாதத்திற்குள் 'வெற்றி உறுதி' நடவடிக்கை முற்றுப் பெற்றுவிடும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

சிறிலங்காவின் 50வது சுதந்திரதினத்தை மனதில் வைத்தே அந்தக் காலக்கெடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாசி மாதம் 04ஆம் திகதி சிறிலங்கா, தனது 50ஆவது சுதந்திரதின விழாவைக் கொண்டாட இருக்கின்றது. அந்தச் சுதந்திரப் பொன்விழாப் பூர்த்தியை, மாபெரும் இராணுவ சாதனையுடன் கொண்டாட சந்திரிகா – ரத்வத்த அரசாங்கம் ஆசைப்படுகின்றது. இந்த ஆசையைப் பூர்த்திசெய்ய சிங்களப் படையினர்க்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே அவகாசமுள்ளன. தமிழர் நிலத்தின் அரசியல் – இராணுவ யதார்த்தத்தை அளந்தறிவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள், எப்பொழுதுமே சரியான அளவுகோல்களைப் பயன்படுத்தியதில்லை. இப்போதும் அதுதான் நடக்கின்றது.

> ஜயசிக்குறுய் நடவடிக்கை மிகவும் மந்தகதியில் நடைபெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், இதை ஜயசிக்குறுயின் நகர்வுத் தந்திரமாகக் கொள்ளக்கூடாது. உண்மையில் ஜயசிக்குறுயின் சமர்த்தந்திரம், வேகமும் – பேராசையும் (**Speedy and Ambitious**) நிறைந்ததாகவே இருக்கின்றது.

ஜயசிக்குறுய் நடவடிக்கை அரைவாசிக் கட்டத்தை அடைய முன்னரே, அதற்கு ஆட்பற்றாக்குறை ஏற்படத் தொடங்கி விட்டது. சிங்களத்தின் இராணுவப் பேச்சாளரே அதை ஒப்புக்கொண்டுள்ளார். கிழக்கு மாநிலத்தில் இருந்து மேலும் – மேலும் படையினர் ஜயசிக்குறுயிக்காக எடுக்கப்படுகின்றனர். தெற்கில் இருந்தும் துருப்புக்கள் நகர்த்தப்படுகின்றனர். குடாநாட்டில் இருந்தும் படையினர் வன்னிப் போர்முனைக்கு அனுப்பப் படுகின்றனர். இவ்விதம் ஜயசிக்குறுயின் ஆட்தேவை அளவு கடந்துள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினையை சிங்களப் படைத் தலைமை கருத்தில் எடுக்காது – புலிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக அது நம்பும் இராணுவப் பிரச்சினைக்கே முக்கியத்துவம் கொடுத்து – நிலைமையை மதிப்பிட விரும்புகின்றது.

இதேவேளை, ஜயசிக்குறுயிக்கு ஒரே ஒரு குறிக்கோள் மட்டுமே உள்ளதாக அரசாங்கம் காட்டிக்கொள்கின்றது. அதாவது, வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றுவதே அதுவாகும். ஆனால், முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி பாதையைக் கைப்பற்றினாலும் அதைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டிய இராணுவப்பணியைப் படைத்தலைமை சிறியதொரு வேலையாகப் பார்க்கின்றது. ஏனென்றால், பாதையைக் கைப்பற்றி முடிக்கும்போது புலிகளும் அழிந்து விடுவார்கள் என்று அது நம்புகின்றது.

பாதையைக் கைப்பற்றினால் "புலிகளின் கதை முடிந்துவிடும்" என்று எந்த இராணுவ அளவுகோலை வைத்து, அவர்கள் அளந்து பார்த்து எதிர்வு கூறுகின்றார்களோ தெரியவில்லை.

தங்கத்தை, பலசரக்குக் கடைத் தராசில் வைத்து நிறுப்பதுபோல, விடுதலைப் போரை மரபுப் போர்த் தராசில் வைத்து மதிப்பிட அரசு விரும்புகின்றது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், வியட்நாம் மண்ணில் அமெரிக்கா விட்ட தவறைப்போல – பத்துவருடங்களுக்கு முன், தமிழீழத்தில் இந்தியா இழைத்த தவறைப்போல சிங்கள அரசாங்கமும் மதிப்பீட்டுத் தவறிழைத்து வருகின்றது.

அனைத்து ஆக்கிரமிப்புப் படைகளையும் போல சிங்களப் படைத்தலைமையும் மரபுப் போர் மனநிலையில் இருந்தபடியே சிந்திக்கின்றது. அவர்களைப் பொறுத்த வரை இது தவிர்க்க முடியாதது. எல்லாம் முடிந்து பலவருடங்கள் கழிந்தபின்பே இவர்களுக்கு மறுசிந்தனை ஏற்படும். ஒரு அரசுப்படை தோல்விகளைத் தொடர்ச்சியாகத் தழுவும்போது அந்த அரசாங்கம் கவிண்டுவிடுவது சாதாரண வழமை. இதுபோல, ஒரு விடுதலைச் சேனை சில பின்னடைவுகளைக் காணும்போது குறித்த மக்கள் அந்த விடுதலை இயக்கத்தை நிராகரித்து விடுகின்றனர் என்று தவறாகக் கணிப்பிட்டு – தமது ஆசைப்படி எதிர்வு கூறல்களைச் செய்கின்றனர். அதிகளவு நிலங்களை ஆக்கிரமிக்கும் போது – போக்குவரத்துப் பாதைகளைக் கைப்பற்றும்போது – முக்கிய சந்திகளை, பாலங்களைக் கைப்பற்றும்போது ஒரு மரபுப்படை மகிழ்வது அதன் குணாம்சம். சிங்கள படைகளும் அத்தகைய மனநிலையுடனேயே இருக்கின்றன. ஒரு விடுதலை இயக்கத்துடனான போரைப் பொறுத்தவகையில், அந்த மரபுவழி மகிழ்ச்சி சிறிது காலமே நிலைக்கும்.

இந்தியப் படையுடன் சண்டை மூண்டால், "புலிகளை அழிக்க எவ்வளவு காலமெடுக்கும்?" என்ற, இந்திய அரசியல் தலைமையின் வினாவுக்கு, ஒரு மாதத்தில், என்று அதன் இராணுவத் தலைமை உறுதியளித்தது. சண்டை மூண்டது. ஒன்று – ஒன்றரை மாதத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. ஆனால், புலிகளை அழிக்க முடியவில்லை. புலிப்படையின் தளப்பகுதி யாழ்ப்பாணம் என்று, மரபுப் போர்வழிச் சிந்தனை முறையில் இந்திய இராணுவத் தலைமை சிந்தித்து, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் புலிகளை அழிக்கலாம் என்று தவறாக மதிப்பிட்டு – எதிர்வு கூறலில் தவறிழைத்தது.

'ஒப்பறேசன் பவான்' என்று அழைக்கப் பட்ட யாழ்ப்பாணச் சமரில் இந்திய இராணுவத்தலைமை இழைத்த மதிப்பீட்டுத் தவறை, அதைத் தொடர்ந்துவந்த வன்னிச் சமரில் திருத்த முயன்றது.

'செக்மேற்' சமரை இந்தியப் படைகள் திட்டமிட்டே நடாத்தின. களமுனையிலேயே தலைமையகத்தை (நித்திகைக் குளம்) அமைத்தபடி சமரை படைத்தலைமை நெறிப்படுத்தியது. மெதுவாக– அதேவேளை உறுதியாக (Slow and Steady) என்ற சமர்த்தந்திரத்தை சண்டைகளில் கடைப்பிடித்தது. சிறு – சிறு ஓய்வுகள் என்ற அடிப்படையில் செக்மேற், சுமார் பத்து மாதங்கள் நடைபெற்றது. முடிவு.... உலகின் முதல்தர கெரில்லாத் தலைவன் என்ற புகழாரம் தலைவர் பிரபாகரனுக்குக் கிடைத்தது. அத்துடன், புலிகள் இயக்கமும்– தமிழர் போராட்டமும் உலகப் புகழ் அடைந்தன.

"யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் புலிகளின்கதை முடியும்" என்ற இந்திய இராணுவத் தலைமையின் எதிர்வு கூறலையே, சிங்களத் தளபதிகளும் வெளியிட்டிருந்தனர். முன்னவரைப் போலவே பின்னவரும் எதிர்வு கூறலில் தோற்றிருந்தார். இப்போது, வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றினால் புலிகளின் கதை முடியும் என்று புதிய நம்பிக்கையை சிங்கள தேசம் வெளியிட்டுள்ளது.

ஜயசிக்குறுய் நடவடிக்கை மிகவும் மந்தகதியில் நடைபெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், இதை ஜயசிக்குறுயின் நகர்வுத் தந்திரமாகக் கொள்ளக்கூடாது. உண்மையில் ஜயசிக்குறுயின் சமர்த்தந்திரம் வேகமும் – பேராசையும் (Speedy and Ambitious) நிறைந்ததாகவே இருக்கின்றது. வவுனியா – கிளிநொச்சி பாதையை ஒரு மாதத்திற்குள் கைப்பற்றிவிடலாம் என்பதுதான் படைத்தலைமையின் முன்னைய எதிர்பார்ப்பு. அதாவது வேகம், ஜயசிக்குறுயின் திட்டமிடலில் முக்கிய அம்சமாக இருந்தது. அதேவேளை, பாதையை அமைத்து – புலிகளை அழித்து – போராட்டத்தை ஒழித்து – வடக்கை தெற்குடன் இணைத்து.... என்ற பல்வேறு ஆசைகள் ஜயசிக்குறுயின் இலட்சியங்களாக இருக் கின்றன.

வன்னிப் போர்க்களத்தில் நிதானமாகச் சண்டையிட்ட இந்தியப் படையே தோல்வியுற்றுத் திரும்பியது. ஆனால், வேகத்தையும் பேராசையையும் அடிநாதமாகக் கொண்ட ஜயசிக்குறுய் நடவடிக்கையில் சண்டையிடும் சிங்களப் படைகள், காலகதியில் படுதோல்வி காணப்போவது உறுதி.

> வன்னிப் போர்க்களத்தில் நிதானமாகச் சண்டையிட்ட இந்தியப் படையே தோல்வியுற்றுத் திரும்பியது. ஆனால், வேகத்தையும் பேராசையையும் அடிநாதமாகக் கொண்ட ஜயசிக்குறுய் நடவடிக்கையில் சண்டையிடும் சிங்களப் படைகள், காலகதியில் படுதோல்வி காணப்போவது உறுதி.

மாசி மாதத்திற்கு முன்னர் புலிகளை அழித்து, போர் ஓய்வுக்கு வரும் என்று ரத்வத்த கூறுகின்றார். இந்த வருட முடிவுக்குள் போர் நின்று, அமைதி வந்துவிடும் என்று சந்திரிகா அம்மையார் நம்புகின்றார். புலிகளை முற்றாக அழிக்க இன்னும் மூன்று – நான்கு வருடங்கள் செல்லும் என்று இராணுவத் தளபதி தலுவத்த தெரிவித்துள்ளார்.

உண்மையில் இவையெல்லாம் இவர்களின் கூற்றுக்களோ அல்லது எதிர்வு கூறல்களோ அல்ல. மாறாக, இவர்களின் ஆழ்மன ஆசைகளே அவையாகும்.

**(நன்றி- விடுதலைப் புலிகள்)**

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

சிறிலங்கா அரசு தன் ஆக்கிரமிப்பை 'சுதந்திரம்' எனவும் தன் இனஒடுக்குமுறையை 'ஜனநாயகம்' எனவும் உலகுக்கு காட்டுவதற்காக, இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவத்தில் இருந்து விலகிய 50வது ஆண்டை பொன்விழா ஆண்டாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில் உன்னைச் சந்திக்கிறேன்.

உனக்குத் தெரியும் தமிழர்களாகிய நாம் இந்த 50 ஆண்டுகளும் எப்படி எப்படியெல்லாம் சிங்கள அரசின் அடக்குமுறைகளுக்கு உட்பட்டோம் - உட்பட்டு வருகிறோம் என்பது. ஆனால் சிறிலங்கா அரசோ தமிழர்கள் தனது ஆட்சியில் கொடிகட்டிப் பறப்பதாகக் கதையளக்கிறது. சிங்கள அரசின் கால் பற்றி நிற்கும் மனச்சாட்சியற்ற, இனமான உணர்வற்ற சில தமிழர்களும் இந்த 'பொன்விழா' கொண்டாட்டங்களுக்கு உறுதுணையாக நிற்கின்றனர். இந்நேரத்தில் உரிமை மறுக்கப்பட்ட எமது தமிழீழ மக்களுக்கு நானும் நீயும்தான் பிரதிநிதிகளாக அவர்களின் அவலநிலையை உலகுக்கு எடுத்துக் கூறவேண்டும். இதை எப்படிக் கூறலாம்.

முதலாவதாக, ஜனநாயகமும் சுதந்திரமும் நம்நாட்டில் பட்டொளி வீசுவதாக இருந்தால் ஏன் எங்கள் அழகான தாயகத்தை விட்டு அகதிகளாக உலக வலம் வருகிறோம். இந்தக் கேள்விக்குரிய உண்மை விடையை உலகுக்கு தெரிவிக்க வேண்டும். அதுவே சிறிலங்கா அரசில் ஜனநாயகம், சுதந்திரம் நிலவுகிறதா என்பதற்குத் தலைசிறந்த சாட்சி. அத்துடன் நாளாந்தம் நம் உறவுகள் சிங்கள அரசின் தடைகளால் படும் அவலங்களையும் நாமேதான் வெளிப்படுத்த வேண்டும். எமக்காய் எமது வருங்கால எழுச்சிக்காய் அங்கே ஒரு சமுதாயம் செத்து மடிகையிலே - நாம் நமக்கென்ன வந்தது என்று அசட்டை செய்து வாழ்வது எந்த வகையிலும் நியாயப்படுத்தக்கூடிய ஒன்றல்ல.

அன்புச் சகோதரமே! நாம் ஏன் அகதியானோம். நம் மக்களுக்கு நம் தேசத்திற்கு என்ன நடக்கிறது என்பதை நாம் எடுத்துக்கூற மறுப்பதினால்தான் நம்மையும் 'பொருளாதார அகதிகளாக' நாம் வாழும் தேசங்கள் கருதுகின்றன. இது எமக்கும் எமது குழந்தைகளுக்கும் எதிரான உணர்வுகளையும் சட்டங்கள், திருப்பியனுப்புதல்கள் போன்றவை ஏற்பட வழிசெய்கின்றன என்பது வேதனையான உண்மை. ஆகவே, தமிழீழ மக்களுக்காக மட்டுமல்ல, எமக்காகவும் நாம் நமது புகலிடக் கோரிக்கையின் உண்மையை உடனே உலகுக்குக் கூறியாக வேண்டும். நமது தமிழீழத் தேசத்தில் தமிழீழ மக்களாகிய எமக்கு பாதுகாப்பான, அமைதியான வாழ்வு சிங்கள அரசால் மறுக்கப்படுகிறது என்பதை தெளிவுறக் கூறவேண்டும்.

மேலும் நமக்கொரு உண்மை தெரிய வேண்டும். சுதந்திரம் என்பது அனைவரும் ஒன்றிணைந்து போராடிப் பெறுவது. ''அவர்கள் போராடட்டும்; வென்றால் நாமும் அதில் ஒன்றிணைவோம். ஆனால் அந்தப் போராட்டத்தின் பளு எம்மை அழுத்தாமல் பார்த்துக் கொள்வோம்'' என இருந்தோமேயானால் அதைவிடக் கேவலமான மனிதப் பண்பு வேறு எதுவுமேயில்லை.

ஆதலால், எங்கிருந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் எமது தேசத்தின் எமது மக்களின் விடுதலைக்கு நாமும் போராடியே ஆகவேண்டும். போராட்டம் என்றால் எல்லோரும் ஆயுதம் ஏந்துவது என்பது பொருளல்ல. ஒரு போராட்டம் வெற்றி பெறுவதற்கு எத்தனையோ விதமான உழைப்புகள், பங்களிப்புகள், நிதியளிப்புகள், மதியளிப்புகள் தேவையாக உள்ளன. இவற்றில் எல்லாம் நாமும் ஏதோ ஒருவகையில் பங்கேற்க வேண்டும். இதற்கு நேரமின்மை ஒரு தடையாக அமையக்கூடாது. வேலை செய்வதற்காக மட்டும் நாம் புகலிட அனுமதி பெறவில்லை என்ற உண்மையை எங்கள் நெஞ்சம் மறக்கக்கூடாது. நாம் புகலிட அந்தஸ்து பெற்றது எதற்காக என்ற உண்மையை எமது வாயினால் எடுத்துக்கூற, நாம் நேரமின்மை தடையாகவுள்ளது என்பதைக் காரணமாகக் காட்டுவோமாயின், இந்தச் சமுதாயம் நம்மை ''பொருளாதார அகதிகள்'' என விடுக்கும் குற்றச்சாட்டும் உண்மையாகிவிடும். அதற்காக, தொழிலைக் கைவிட்டு தேசப் பணி செய்ய வேண்டும் என்பதல்ல. தொழில் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் சில மணித்துளிகளை தேசப் பணிக்கு ஒதுக்க எம்மைப் பழக்கிக் கொள்ள வேண்டும். எமது நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சில நூறு பவுண்களையாவது ஆண்டுக்கொரு தடவை தேசத்திற்காய் கொடுக்கத் திட்டமிடல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் வாழும் தேசத்தில் உள்ள மக்களும், ''அவர்களுக்கு ஒரு நாடு உண்டு - அங்கு வாழ முடியாமல்தான் இங்கு வந்து தவிக்கிறார்கள். நாளை அந்த நாடு மீண்டால் இவர்களும் நமது தேசத்திற்குப் பாரமாக, பளுவாக மாறாது மீண்டு செல்வர்'' என்ற நம்பிக்கையைப் பெற்று நம்மை மதிப்பார்கள் - அதுவரை நமக்குத் தீங்கும் செய்ய மாட்டார்கள்.

அதேபோல, நமது தேச விடுதலைக்காய், நமது மக்களின் துயர்களை விலக்குவதற்காய், நம் மக்களுக்குப் புனர்வாழ்வு வழங்குவதற்காய், நம் தேசத்தை புனரமைப்பதற்காய் நடாத்தப்படும் செயற்திட்டங்களை நமது வாழ்வின் செயற்திட்டங்களில் ஒன்றாக ஏற்க நாம் பழக வேண்டும். ஏற்கனவே அதில் பலர் இணைந்து செய்கிறார்கள்தானே என நாம் நினைப்போமானால் அது தவறு. எந்த ஒரு செயற்திட்டமும் அதில் பங்கெடுக்கும் மக்களின் பலத்தினாலேயே வெற்றி ஈட்ட முடியும். அதேபோல, இந்த நாடுகளில் இடம்பெறும் பேரணிகள் என்பதும், மக்களின் பங்களிப்பை வெகுசன சாதனங்களும் அரசியற் தலைமைகளும் நாடி பிடித்துப் பார்ப்பதற்கான கருவிகளாய் அமைகின்றன. எனவே எமது ஆதரவை வெளிப்படுத்த இவ்வாறான பேரணிகளே எமக்குச் சரியான சந்தர்ப்பத்தைத் தருகின்றன. பேரணிகளில் மக்கள் தொகை குறைவாக இருந்தால் அதுவே எமக்குப் பாதகமாக அமைந்துவிடும். எமது விடுதலையின் வேகத்தைக் காட்ட மக்கள் தொகை பேரணியில் அதிகளவு இருந்தாலே எமது கோரிக்கையின் பலமும் அதிகரிக்கும். ஆதலால் பேரணியில் பங்கு கொள்வதின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவற்றில் ஒவ்வொருவரும் குடும்பத்துடன் பங்கெடுக்க இயலுமான அளவு முயற்சிக்க வேண்டும்.

பேரணி என்பது தெருவில் கூச்சல் போடுவதற்கோ, அணி நடையிடுவதற்கோ திட்டமிடப்படுபவை அல்ல. மக்கள் சக்தியை உணர்த்தக் கையாளப்படும் பிரதான கருவிகளில் ஒன்றே அது. எனவே, புலம்பெயர் தமிழர்களாகிய நாம் பேரணிகளில் கலந்து நமது பங்களிப்பைச் செய்வதை நமது தேசக் கடமையாகக் கருத வேண்டும்.

அன்புச் சகோதரமே! இந்த 98ஆம் ஆண்டு நாம் நமது புலம்பெயர் தமிழ்ச் சமுதாயத்தின் பலத்தை உலகுக்கு உணர்த்தும் ஆண்டாக அமைய வேண்டும் என எல்லோரும் வாழ்த்துவோம். அந்தப் பலத்தின் வலிமையுடன் எமது தமிழீழத் தேசமும் மக்களும் கடந்த 50 ஆண்டுகளாக அனுபவிக்கும் ஆக்கிரமிப்பு அரசின் கொடுமைகளை உலகுக்கு எடுத்துக் கூறுவோம். அப்பொழுது 'பொன்விழா' வின் பொன் முலாம் கரைந்து சிறிலங்கா அரசின் பயங்கரவாதம் வெளியாகும்.

அன்புச் சகோதரமே! இனி நாம் இருவாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் உறவாடுவோம். உங்கள் கருத்துக்களை, சந்தேகங்களை, ஆலோசனைகளை தயங்காது எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு தமிழீழக் குடியினதும் செயற்பாட்டாலேயே தமிழீழத் தேசத்தின் சுதந்திரம் விரைவாகும் என்பதை நாமறிவோம். ஆகவே, எல்லோரது கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் சந்தேகங்களுக்கும் மதிப்பு அளிக்கப்பட்டு எமது செயற்திட்டங்கள் வளர ஆவன செய்வோம். ஆகவே, எழுதுங்கள் - வாருங்கள் - இணையுங்கள் - பணி செய்வோம் - தேசம் விடுதலை பெறும்.

அன்புடன்
ஆசிரியர்.

## என்ர தம்பி ........
## (சிறுகதை (தொடர்ச்சி)

தங்கள் கைகளில் வைத்திருந்த தடியினால்.....

அம்மாளே. . . !

ஐயோ கடவுளே. . . !

இந்தக் கொடுமைகளுக்கு நடுவிலேதான் – கௌரியும் – அவள் பெற்றோரும் ஓடிக் கொண்டே இருந்தார்கள்......

கடைசியில் அகிலன்.....?

பிணமாய்க் கிடக்கிறான்.

கதறல்கள், அழுகைகள், விம்மல்கள், அந்த அதிகாரியின் புரியாத பாசையின் கேள்விகள், ஊர்ப் பெரியவர்களின் பயத்துடனான மொழிபெயர்ப்புக்கள், பாவம் அவர்களின் பதில்கள்.

"உன்ட மகனா?"

தலையாட்டினார்.

'பெயர்?'

'அகிலன்.'

"எவ்வளவு காலம் போய்?"

"மூன்று வருஷம்."

"ஊரில் இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

'தெரியாது.'

"வீட்டில் இது வைச்சிருக்கிறானா?" –என கைகளில் வைத்திருந்ததைக் காட்டிக் கேட்டான்.

'இல்லை.'

'பொய் சொல்லாத.'

'இல்லை.'

"எல்லாரும் வண்டியில ஏறுங்க வீட்டை போக."

அந்தப் பெரிய வாகனத்தின் பின் பக்கம் அவன் உடல் ஏற்றப்பட்டது. பின் ஒரு துணியினால் மூடி விட்டார்கள்.

ஊர்ப் பெரியவர்களை ஜீப்பில் ஏறச் சொல்லி, இவர்களை உடல் வைத்த வண்டியில் ஏறச் சொன்னார்கள்.

வீட்டு வாசலில் வண்டி நிற்க, இவர்களை வண்டியிலேயே இருக்கச் சொல்லிவிட்டு அவர்கள் மட்டும் உள்ளே போனார்கள்.

அந்த ஓலை மண் வீட்டில், எல்லா இடமும் துருவித் துருவி அலசினார்கள். கொட்டிச் சிதறினார்கள். ஓலைகளைப் பிரித்துப் பார்த்தார்கள். பொயிலை உலர்த்தும் கிடங்கை ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

அதனைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார்கள். வீட்டைச் சுற்றி மண்வெட்டியினால் கொத்தினார்கள்.

கடைசியில் சில பிரசுரங்களும் போஸ்டர்களும் கிடைத்தன.

"யார் இது படத்தில்?"

"என்ரை மகனின்ர சிநேகிதன். இங்க ஆமியோட சண்டையில செத்துப்போனான்."

"ஒண்டும் இல்லையெண்டாய், இப்ப இது....?" அந்த அதிகாரி தந்தையின் கன்னத்தில் அடித்தார். "அப்பாவை விடுங்கோ, சுகமில்லாதவர்."

"இவனும் சுடுவானோ?" அவன் கையில் வைத்திருந்த குழந்தையைக் காட்டிக் கேட்டான். அது அழுவதற்குப் பயந்து முழித்தபடி இருந்தது.

சிறிது நேரத்தில் அந்த அதிகாரியின் கட்டளைப்படி எஞ்சிய பொருட்கள் எரிக்கப்பட்டன.

அயலில் வசித்தவர்கள் ஒருவரும் வெளியே வரவில்லை.

அகிலனின் அப்பா, மகனை கெதியில் தங்களிடம் தரமாட்டார்களா எனத் தவித்தார்.

அது பற்றிக் கேட்டதற்கு, தங்களின் 'காம்புக்குக் கொண்டு போய்க் காட்டிய பிறகு தரலாம் என அந்த அதிகாரி சினத்துடன் கூறினான்.

மறுபடி பெரியவர்களுடன் அகிலனின் தந்தை மட்டும் பயணமானார். மற்றவர்கள் கூட வர அனுமதிக்க வில்லை.

'காம்பில்' உடல் இறக்கப்பட்டு மேலும் சில உயர் அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். அடுத்த கட்டமாக ஒரு துண்டுக் காகிதத்தில் அவரிடம் கையெழுத்து வேண்டினார்கள்.

அவருக்கு என்னவென்று விளங்க வில்லை.

பெரியவர்கள் முழித்தார்கள்.

"நான் இவர்களுக்கு எதற்கு கையொப்பம் இட்டு ஒப்புதல் அளிக்கின்றேன்:

இது இயற்கை மரணமா அல்லது வேறு...."

மகனே போய்விட்டான். . . . .

அதே வாகனத்தில் உடலை ஏற்றி வீடு வந்து சேர்ந்தார்கள். உடல் வீட்டின் வாசலில் கிடத்தப்பட்டு.....

அந்த அதிகாரி பக்கத்திலே இருந்தார். பின் அகிலனின் தந்தையாரை அழைத்துச் சொன்னார்: "நான் இப்படி நடந்ததையிட்டு வருத்தப்படுகிறேன்."

பின் ஏதோ யோசித்தபடி பக்கத்தில் உடன் இருந்தவர்களோடு கதைத்து, தனது 'மணிபர்சில்' இருந்து சில ரூபா தாள்களை எடுத்து அவர் கைகளில் திணிக்க, இதுவரையும் அவரின் செய்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த அக்கா கௌரி ஓடிவந்து, தகப்பனின் கைகளில் திணித்த ரூபாய் தாள்களைப் பறித்து அதிகாரி முகத்தில் வீசினாள் ஏசியபடி.

"பிடியுங்கோ உங்கட காசை: என்ரை தம்பி இந்தக் காசுக்காண்டி சாகல, இது உங்களுக்குப் புரியாது." ✳

www.tamilarangam.net



## சிறுகதை

தூரத்தே – இடைமிடையே குண்டுகள் வெடித்த சத்தத்தைத் தொடர்ந்து, நிலம் அதிர்ந்தது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கேட்டது. இயந்திரப்



# என்ரை தம்பி காசுக்காண்டி....

– அரசகேசரி

பறவையின் ஓசையும் மெல்லியதாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

பிரதான ரோட்டில் விரைந்து செல்லும் பெரிய கனத்த வாகனத்தின் – பெரிய நீண்ட இழுவைச் சத்தம் உடன் கேட்டு அற்றுப் போனது. ஊரே இருளில் மறைந்து போயிருந்தது. நாய்களின் குரைப்புச் சத்தத்தைக்கூடக் காணவில்லை. இதிலிருந்து 'அவர்கள்' இன்னும் 'ரோந்துக்கு' வெளிக்கிடவில்லை எனத் தெரிந்தது.

வாழைத் தோட்டத்தின் மத்தியில் தண்ணி ஓடும் பெரிய வாய்க்காலின் நடுவில் மல்லாந்து படுத்திருந்தான் அகிலன். அவனுக்கு எதிராகப் பிரேமும் ரகுவும் வாழைப் பாத்திக்குள் அமர்ந்திருந்தார்கள்.

கைகளில் அந்த ஆயுதங்கள் இருளோடு இருளாக மறைந்து கிடந்தன.

என்ன கதைப்பது என்பது தெரியாமல் மூவரும் யோசனையில் மூழ்கி இருந்தார்கள். தொடர்ந்தாற்போல அடிக்கடி இடம் மாறிய களைப்பு அவர்கள் உடம்பை வாட்டிக்கொண்டிருந்தது. அகிலனின் இடதுகை, கழுத்தில் கிடந்த அந்த 'விசக்குப்பியை' தொட்டுக்கொண்டது. மெல்லியதாகக் குளிர்காற்று வீசி உடலுக்கு இதத்தைக் கொடுத்தது. ரகு மௌனத்தைக் கலைத்தான்.

"அகிலன் பாத்தியே போனமுறை அங்க கட்டுவனில அவர்களோட சண்டை பிடித்து உள்ளுக்கு விடாமல் துரத்திக்கொண்டு இருந்தம், இப்ப இவர்களோட....."

"இடைமில எத்தன சம்பவங்கள், மாற்றங்கள்."

"ஒரு இனம் நிம்மதியாய், சந்தோசமாக தங்கட மண்ணில வாழுறதுக்கு ஏன்தான் உவங்கள் விடுறாங்கள் இல்லை...."

"பாவம் எங்கட சனங்கள்."

குழந்தையொன்று வீரிட்டு அழும் சத்தம் காற்றில் வந்தது.

"பிரேம் அந்தக் குழந்தை அழுகிற சத்தம் இந்த இரவில் கேக்க ஒரு மாதிரியெல்ல இருக்கு"

என அகிலன் சொன்னான்.

"உண்மைதான் கேக்க மனதுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கு."

"என்ரை அக்காவின்ரை பிள்ளையும் இப்படித்தான் வீட்டில் அழுது கொண்டிருப்பானோ...." என அகிலன் நினைத்தான்.

மனம் மெல்ல, மெல்ல வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கியது.

* * *

அவன் வீட்டில் இருந்து பார்த்தால் ரயில் போவது வடிவாகத் தெரியும். அம்மா, அப்பாவிற்கு தோட்டத்திற்கு சாப்பாடு கொண்டுபோக, பள்ளிக்கூடம்போக புகையிரதம் வந்து–போகும் நேரம்தான் அவர்களுக்கு உதவியது.

காலை ஏழரை மணி அளவில் பனைக்கூடலுக்கு மத்தியில் புகையிரதம் தலை நீட்டும்போது, அவன் வீட்டு வாசலில் பள்ளிக்குப் போகத் தயாராக இருப்பான்.

பழைய சைக்கிள் ரியூப்பின் ஒரு நீளத்துண்டால், புத்தகம் கொப்பிகளை வரித்துக் கட்டியிருப்பான். அவன் வகுப்புக்குப் போகும்வரை அவை அசையவே அசையாது.

புகையிரதம், புகைவண்டி நிலையத்தில் நின்று பெருமூச்சு விட்டு, பின் வெளிக்கிட்டு நகர்ந்து, நகர்ந்து விரைவு படுத்தும்போது அவன் நின்ற இடத்திலிருந்து ஒரு துள்ளலுடன் கத்தியபடி அதனோடு சேர்ந்து விடுவான்.

புகையிரதத்தில் இருப்பவர்கள் இவனைப் பார்த்து சிரித்தபடி கையசைப்பார்கள். அப்படி ஓடும்போது இவன் போட்டிருந்த அரைக்காற்சட்டை கழன்று கீழே விழ, மறுபடியும் மேலே இழுத்து விட்டுக் கொண்டு ஓட்டம் பிடிப்பான்.

கால ஓட்டமும் ஆரம்பத்தில அவனுக்குச் சந்தோசமாகத்தான் இருந்தது. இருந்தும் அப்படித் தொடர்ந்து இருக்கக் கடவுள் விரும்பவில்லை.

இளவயதில் புகையிரதத்தோடு ஓடியது – பள்ளியில் பாடம் முடிந்து வீடு திரும்பியது – பின் வைரவர் கோமில் வீதியில் கிளித்தட்டு விளையாடியது – காலையில் எழும்பித் தோட்டத்தில் வேலை போய்ப் பார்த்தது...

அப்படியே மெல்ல மெல்ல வகுப்பு இடம் மாறி ரகுவும் சம்பந்தனும் நெருங்கிய நண்பர்களானது – உதட்டுக்கு மேல் முளைத்த பூனை மயிர்கள் கறுக்கத் தொடங்கியது. . . .

அம்மா, அப்பா, அக்கா எல்லோரையும் நினைத்து மனம் வைத்துப் படிக்கத் தொடங்கி....

சாதாரணம் தாண்டி உயர்தரம் வந்து, இதில் நன்றாகப் படித்து சித்தியடைந்தால் உயர் படிப்பு – பின் வேலை, குடும்பக் கஷ்டம் நீங்கும். . . .

எனப் பல கற்பனைகள். . . . .

நடந்தது. . . ?

'அட்வான்ஸ் லெவல்' படித்து, பரீட்சை எழுதி வீட்டில் நிற்கும்போதுதான், வவுனியா போகும்போது வழியில் சம்பந்தன் அநியாயமாகச் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டான்.

சம்பந்தனின் மறைவு மனதில் ஏற்படுத்திய தாக்கம், சித்தியடைந்தும் உயர்கல்வி மேலே படிக்க முடியாமல் இருந்த கல்வி நிலை, இவன் மாத்திரமல்லாது எத்தனை பேர்....?

எதிர்பார்த்த கனவுகள் பூச்சியமாகத் தெரிந்தது மட்டுமல்ல, ஆண்டுக்கு ஆண்டு நடக்கும் – இனத்தை இனம் அழிக்கும் செயல்கள் கண்டு மனம் குழம்பிக் குழம்பி வெறுப் படைந்தது. கடைசியில் கொஞ்சம், கொஞ்சமாக இளவயதினர் காணாமல்போக – அவனும் அதேபோல் ஆனான்.

கைகள் அந்த கனத்த இரும்பு ஆயுதத்தைத் தூக்கத் தொடங்கின.

* * *

"என்ன அகிலன் பேசாமல் இருக்கிறாய்?" – இது ரகு.

"வீட்டு யோசனைதான்" –இது அகிலன்.

"அண்டைக்கு உன்ரை அக்காவைப் பார்த்தனான்: குழந்தையோட போனா. கௌரி அக்கா என்று கூப்பிடப் பாத்தன். பிறகு பேசாமல் விட்டுட்டன். மகன் உன்னை மாதிரித்தான் இருந்தான்" – இது பிரேம்.

பிரேம் சொல்வதைக் கேட்டு அகிலன் மெல்லியதாகச் சிரித்தான்.

"என்ரை சாயலில இருக்கட்டும்: அவன் வயது வரக்க என்னை மாதிரி ஆளாகாமல், அவன்ரை சந்ததி தன்னும் நிம்மதியாய் வாழ வேணும்."

இரவு நீண்டுகொண்டு போக, இருந்தாற் போல் நாய்களின் குரைப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

அவ்வளவுதான், மூவரும் பட்டென எழுந்தார்கள். கைகளில் அந்த இயந்திர ஆயுதத்தை இறுகப் பிடித்தபடி, பிரேம் வலக்கையில் அந்தக் கிளிப்பு பொருத்திய உருண்ட பொருளை வீசுவதற்கு ரெடியாக வைத்திருந்தான்.

"அவங்கள்தான் ரோந்து பார்க்க வெளிக்கிட்டான்கள் – எதற்கும் கவனமாக இருப்பம்." நாய்களின் குரைப்பு இப்போது முன்னைவிட அருகில் கேட்கத் தொடங்கியது.

"பிரேம் வலு கவனம்: வைரவர் கோமிலடிப் பக்கம்தான் நிக்கிறாங்கள்."

நேரம் நகர்ந்தது.

"ரகு, நிச்சயம் அவங்கள் ரோந்துக்கு வரேல."

அவர்கள் வரும் ஆபத்தைப் புரிந்து கொண்டார்கள்.

காலடி ஓசைகள், கட்டளைகள், அருகில் கேட்டு முடிய பிரேம் கிளிப்பைக் கழற்றி வீசினான்.

குண்டு வெடித்தது. துப்பாக்கிகள் சடசடத்தன.


"பிரேம், ரகு நீங்கள் நிக்கவேண்டாம்: கெதியில் மாறுங்கோ. எனக்குத் தலைக்குள்ள ஏதோ செய்யுது." மார்பிலிருந்து ரத்தம் பீரிட்டது.

* * *

காலை நேரம் . . . .

வாழைத் தோட்டத்தின் முடிவில்–

அகிலன் நிம்மதியாக உறங்கியிருந்தான். அவனைச் சுற்றி ஒரே பட்டாளமாக 'அவர்கள்' நின்றிருந்தார்கள். வெளியில் நடமாடிய சிலரைப் பிடித்து வந்து அவனைக் காட்டினார்கள்.



"பாரு உங்கட புலிக்குட்டி."

ஊருக்குச் செய்தி பரவியது. இராத்திரி நடந்த அமளியின் முடிவை சனங்கள் அறிந்திருந்தார்கள். கோயிலில் சனங்கள் கும்பலாக இருந்தார்கள். இரவு, வீடுகளில் காவலுக்குப் படுத்தவர்கள் அமளியைத் தொடர்ந்து, கோமிலுக்கு வந்துவிட்டார்கள்.

அதிகாலையில் காலைக் கடனை முடிக்க வெளிமில் போன சிலர், வெளிமில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொடர் வாகனங்களைக் கண்டு உடனேயே ஓடி வந்துவிட்டார்கள்.

தெரியாமல் சிலர் மாட்டிக் கொண்டார்கள். 'அவர்கள் விடிந்தும் இன்னமும் வராதது கண்டு எல்லோரும் பயந்தார்கள்.

சிறிது நேரத்தின் பின் அவர்கள், தள்ளாடியபடி வீங்கிய முகத்துடன் ஊருக்கு வந்தார்கள்.

"என்ன அடிச்சவங்களே?"

"எங்கள பிடிச்சு வைச்சிட்டு, இப்ப விடுவம்: கோமிலுக்க புலி இருந்தால் சொல்லுங்கோ என்றாங்கள்."

"நாங்கள் தெரியாது என்று சொல்ல...."

"உங்களுக்குத் தெரியாதோ என்று பேசிக்கொண்டு வேலிமில தடியை முறித்து கீழே படுக்கவைச்சுப் போட்டு....."

கதை சொன்னவர்களைச் சுற்றி கூட்டம் கூடியிருந்தது. கோயிலில் இளம் பெடியன்களைப் பார்த்து பலர் கவலைப்பட்டார்கள்.

"கடவுளே. . . ! அவங்கள் வந்து என்ன செய்யப்போறாங்களோ. . . ?"

விழிகள் நிலை குத்தி இருக்க, நெஞ்சு படபடக்க, எல்லாரும் பிரமை பிடித்தவர்கள் போல் இருந்தார்கள்.

அப்போது விரைந்து வந்த ஊர்ப் பெரியவர்கள், மூலையில் குழந்தையோடு படுத்துக் கிடந்த கௌரியை எழுப்பி, ஆறுதலாக விசயத்தைச் சொல்ல....

"ஐயோ என்ரை தம்பியடா."

"தம்பி எங்கள விட்டுட்டுப் போட்டியே!" என்று கத்தினாள் கௌரி. கௌரியின் அலறலைக் கேட்டு, தந்தையும் தாயும் கூடவே சேர்ந்து எழுப்பிய குரல் ஆவேசமாய் ஒலித்தது.

* * *

அம்மா, அப்பா, கௌரி மூவரும் அலறியபடி வெளியில் ஓடினார்கள். இவர்கள் இப்படி ஓடிப்போக கோயில் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த வாகனத்தில் இருந்தவர்கள், உடனே குதித்து ஓடி கோமிலுக்குள் புகுந்தார்கள்.

சில நேரத்தில் இளவயது பெடியன்கள் பலர் கைகள் மேலே தூக்கியபடி வரிசையாக வெளியே வந்தார்கள். பின் எல்லோருடைய கண்களும் துண்டுகளினால் கட்டப்பட்டன.

பிறகு. . . . !

வரிசையாக நடக்கவிடத் தொடங்கினார்கள். வரிசை தவறி நடந்தவர்கள் மீது அவர்கள்

தொடர்ச்சி 10ம் பக்கம்.....

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபது

(தொடர்ச்சி)

நேரடி கையளிப்புக்கு
கென்னத் பிராட்பிரி.
தலைவர்,
அமெரிக்கன் நியூஸ் சின்டிகேட்,
லண்டன் பிரிவு.

**அன்புள்ள பிராட்,**

இந்தக் கடிதமும் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கையும், பிரிட்டிஷ் சர்வதேச விமானசேவையில் விமானமோட்டியாக பணிபுரியும் எப். எப். வைற்மான் மூலம் உம்மை வந்து சேரும்.

கிடியோன் திட்டத்தின் ஆரம்ப தினத்துக்கு ('D' Day) இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்றன. இந்த அறிக்கை கிடைத்ததை கேபிள் மூலம் உறுதிப்படுத்தி விடு. இதில் நான் எனது சொந்தக் கணிப்பீட்டைப் பயன் படுத்திியிருக்கிறேன். இது ஒரு பெரிய விடயமாக வெடிக்கக்கூடும்.

ஆரம்ப தினத்தன்று உனக்கு நான் கேபிள் மூலம் அறிவிப்பேன். நான் கேபிளுக்கடியில் மார்க் என்று கையொப்பம் இட்டிருந்தால், எல்லாம் ஒழுங்கு முறைப்படி நிறைவேறி விட்டது, அறிக்கையை வெளியிடலாம் என்று கருத்து. பார்க்கர் என்று கையெழுத்திட்டிருந்தால் வெளியிட வேண்டாம், ஏதோ பிழைத்து விட்டது என்று பொருள்.

நான் எப். எப். வைற்மானுக்கு இதனைப் பத்திரமாக கொண்டு சேர்த்தால் 500 டொலர் தருவதாக உறுதியளித்திருக்கிறேன். அவனுக்கு இதைக் கொடுத்துவிடு. கொடுப்பாயல்லவா?

மார்க் பார்க்கர்.

மார்க் பார்க்கர்,
டோம் ஹோட்டல்,
கைரேனியா, சைப்பிரஸ்.

டொறத்தி அன்றி பத்திரமாக வந்து சேர்ந்தாள். அவளைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சியடைந்தோம். உன் கடிதம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

பிராட்

மார்க்கின் அறிக்கை ஏ. என். எஸ். லண்டன் பிரிவில் வெளியிடப்படுவதற்கான சமிக்ஞையை எதிர்பார்த்துப் பத்திரமாக வைக்கப் பட்டது.

கிற்றி கராலொஸ்ஸில் வேலை செய்யச் சென்றபோது டோம் ஹோட்டலில் இருந்து பாமாகுஸ்ராவின் கிங் ஜோர்ஜ் ஹோட்டலுக்கு இடம்மாறினாள். எக்ஸோடஸ் கைரே னியாவுக்கு வரும்போது பிரசன்ன மாயிருக்கும் நோக்கில், மார்க் டோம் ஹோட்டலிலேயே தங்கியிருக்கத் தீர்மானித்தான்.

அவளைச் சந்திப்பதற்காக அவன் இருமுறை சென்றிருந்தான். இருமுறையும் அவள் முகாமில் இருந்தாள். மாண்ட்றியா மார்க் சந்தேகப்பட்டதை உறுதி செய்தான். அந்த அகதிப் பெண்பிள்ளை, கிற்றியின் உதவியாளாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாள். நாள் முழுவதும் அவர்கள் இருவரும் ஒன்றாகவே இருந்தார்கள். மார்க் கவலையடைந்தான். தனது இறந்த குழந்தையின் நினைவுகளை இக்குழந்தையின் மூலம் மீட்டியெழுப்ப முயல்வதை விட, வேறு புத்தி சாலித்தனமான முயற்சிகளில் இறங்கி மிருக்கலாம் கிற்றி என, மார்க் நினைத்துக் கொண்டான். இதில் ஏதோ



சீரற்ற ஒன்று இளையோடுவதை உணர்ந்து கொண்டான். அதை விடவும் அவள் போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களைக் கராலொகுக்கு வெளியே கடத்திச் செல்லும் விடயமும் வேறு இருந்தது.

தொடரும்...

## பொன்விழா கொண்டாட இருந்த.........

ஏற்பாடுகளையும் மீறி, வெடிமருந்து ஏற்றிய வாகனத்தில் முன்னேறியவர்கள் நடாத்திய குண்டு வெடிப்பினால் தலதா மாளிகையின் ஒரு பகுதி அதன் கூரை உட்பட கடுஞ்சேதம் அடைந்ததாகத் தெரிய வருகிறது. இத்தாக்குதலின் போது 11 பேருக்கு மேற்பட்டோர் இறந்ததாகவும் மேலும் 20 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்தைத் திருத்தி, அவ்விடத்திலேயே திட்டமிட்டபடி சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கொண்டாடப் போவதாகப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த விறாப்புப் பேசியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

பிரதான பௌத்த பிக்குகளின் சங்கங்கள், இலங்கைக்குச் செல்லவிருந்த பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸின் வருகைக்குப் பலத்த ஆட்சேபங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத்தில், பொன்விழா அரசியலுக்குப் பயன்படவிருந்த அந்தப் பழமைமிகு பௌத்தக் கட்டடம் சேதமடைந்துள்ளது.

இதே நேரத்தில் இத்தலதா மாளிகைக் குண்டு வெடிப்பினை அடுத்து, கண்டி மாநகர் வாழ் தமிழர்கள்மேல் இனவாதத் தாக்குதல்கள் சிங்களக் காடையர்களினால் நடாத்தப்பட்டுள்ளன. புகழ்பெற்ற கட்டுக்கலை பிள்ளையார் கோயில், கண்டியில் உள்ள பெரிய கட்டடங்களில் ஒன்றான இந்து கலாச்சார மண்டபம் ஆகியன காடையர்களினால் தாக்கப்பட்டுள்ளன. இந்து கலாச்சார மண்டபம் தாக்குதலுக்கு உள்ளாகுகையில் அங்கு நடை பெற்றுக்கொண்டிருந்த திருமணத்தில் பங்கெடுத்த தமிழர்களும் தாக்கப்பட்டு, அவர்களின் நகைகளும் சூறையாடப்பட்டதாகவும் தமிழரின் கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. ✳

## ஐம்பதாண்டு அக்கிரமங்கள் .........

இழந்தோம் என்பதையும் இதை ஈடுசெய்ய பிரித்தானியா விதித்த அரசியலமைப்பு நிபந்தனையால் எமது இறைமை இலங்கை அரசாங்கத்திடம் மட்டுமன்றி, பிரித்தானியரிடமும் இருந்த தென்பதை எடுத்து விளக்குவது நம்பொறுப்பு. இந்த சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்திய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம், தமிழர்கள் மேல் சட்டபூர்வமற்ற முறையில் திணித்த சிறிலங்கா ஆட்சியையும், அதை எதிர்த்து ஜனநாயக முறைகளில் தமிழர் காட்டிய எதிர்ப்புக்களை சிறிலங்கா ஆயுதத்தால் அடக்க முற்பட்ட செயல்களையும் கூறவேண்டும். அப்பொழுதுதான், தமிழீழத் தேசிய விடுதலைப்போர் ஆயுதப் போராட்டமாக, சட்டபூர்வமாக வடிவெடுத்த சரித்திரம் சர்வதேச உலகுக்குத் தெளிவாகி, நம் சுயநிர்ணய உரிமைப் போரினை உலகு அங்கீகரித்து, சிறிலங்கா எம்மேல் காட்டும் ஆக்கிரமிப்பு விலக வழி பிறக்கும்.

மேலும், ஒரு அரசாங்கம் தனது மக்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்தத் தவறும் பொழுது சர்வதேச அமைப்பான ஐ.நா தலையிடலாம் என்பது சர்வதேச சட்டம். ஆகவே சிறிலங்கா அரசாங்கம் எவ்விதம் தமிழர்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்தத் தவறுகின்றது என்பதை எடுத்துக்கூறி சிறிலங்கா அரசின் எமது மக்கள் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்தும்படி ஐ.நா சபையைக் கொண்டு கட்டளை பிறப்பிக்க வேண்டியவர்கள் நாம். அப்பொழுதுதான், இன்று எங்கள் விடுதலைப் போராளிகளின் உயிர்க்காற்றில் தமிழீழ வானில் அசையும் எங்கள் தேசக்கொடி ஐ.நா சபையில் சுதந்திரக் கொடியாய் அசைகின்ற விடுதலைத் திருநாளை நாம் காணலாம்.

இதற்கெல்லாம் ஒரே வழி, ஒரே துணை, நாம் நம் விடுதலை அவாவை உலகுக்குக் காட்ட பேரணியாகப் பெருந்திரளாக நாம் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் தமிழீழத் தேசப் பணிகளில் இறங்குவதேயாகும். நேரத்துடன், பணத்துடன், போக்குவரத்துக் கஸ்டங்களுடன், காலநிலையுடன் போராடித்தான் நாம் ஒரு அணியாக, பேரணியாக எழ வேண்டும். இதை உணர்ந்து,

**ஒன்றாக எழுவோம்!**

**நம் சுதந்திரம் வெல்வோம்!**

**சிறிலங்காவின் பொன்விழா ஆண்டை, எமது தமிழீழத்தின் விடுதலையாண்டாக மாற்ற, எம்மால் இயன்ற அனைத்தையும் உடனே செய்வோம்!**


## விடுதலைப் புலிகளின் நிர்வாகப் சிறப்பு பற்றி .....

மறுபகிர்வு செய்யப்பட்டது. வீடற்றவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. சமுதாய ஒடுக்கு முறைகளுக்குக் காரண்மாக இருந்த சாதியம், சீதனம் போன்றவற்றுக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டு சமூகநலம் பேணப்பட்டது. சீதனம் ஒழிக்கப்பட்டதுடன் சாதிமுறை கைவிடப்பட்டது. கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட நேரத்திலும் கூட, சக்தியையும் மூலவளங்களையும் பெருக்குவதற்கான மாற்றுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட பொருளாதாரத் திட்டங்களால் பொருளாதார மாற்று வழிகள் கண்டுணரப்பட்டு, மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்காதவாறு தடுக்கப்பட்டனர். பெண்களது சமத்துவத்தைப் பேணக்கூடிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதனாலேயே விடுதலைப் புலிகளின் போராளிகளில் ஐம்பது விழுக்காட்டு அளவினர் பெண் போராளிகளாக உள்ளனர். சந்திரிகா அரசு பேச்சுவார்த்தையூடாக அமைதித் தீர்வை உருவாக்குவதில் காட்டிய அசிரத்தைகளே விடுதலைப் புலிகளை மீளவும் ஆயுதப் போராட்டத்துக்குத் தள்ளியது.

சந்திரிகாவின் சமாதானத் திட்டம் என்பது. அவர் தமிழினத்தின் மீது நடாத்தத் திட்டமிட்ட பாரிய போரிற்கு முன்பாக அதற்கான சர்வதேச ஆதரவைத் தேடுவதற்கான ஒரு சூழ்ச்சித் திட்டம் என்பது சிலரின் கருத்தாக உள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். ✳

www.tamilarangam.net






ஆசியாவின் மாங்கனிக்கு அகவை ஐம்பதாம்.
சர்வலோகம் அதிர தம்பட்டம் அடிப்பது யார்?
பண்டா குடும்பமோ!
முத்து, இரத்தினம், முக்கனி, தேயிலை, சர்க்கரை......
பச்சை, நீலம், மஞ்சள் வர்ணங்கள் தெளித்த மங்கை;
மேலைத் தேசம் யாவும் சொக்கிட நின்ற துவீபம்.
வாலையில் ஆடிய குமரி
இன்று, கிழடுதட்டி, நரைதிரை விழுந்து....
கண்கள் இருண்டு பார்வை கெட்டு....
தேகமெங்கும் சிரங்கு, சொறி, குஷ்டம்
தோல்வெடித்து நிண வெடுக்கு
சேடமிழுக்கும் நேரத்தில்......பட்டுப் பீதாம்பரம் சூடி
மணவாட்டிக் கோலத்தில் பொன்விழாவாம்!
தெளிவு விடுவதற்கும் சில முன்னாள் காதலர்கள்.
முற்றத்தில் கால் பதித்தால் மல்லிகை மலர் வாசம்
முள்பதித்த பின்வளவை கிளறிப்பார்...!
மயிரோடு மண்டையோடு–விழி பிதுங்கி
நேற்றுப் புதைத்த பிணங்கள் எழும்.

இரண்டு ஊருக்கு கூத்தாடி வந்து
ஒன்றுபட்டு இருங்கள் என்று உபதேசம் செய்தானாம்
கடல்கடந்து வந்து சீமையில் கையெழுத்து வாங்கியதில்
'சேர்'.பொன்.ராமநாதன் ஐயாவுக்கும் பங்கிருந்தும்
கூடிக் கழுத்தறுத்தார் நாயக்கா வம்சத்தார்.
சாமரம்–குடை–சங்கு–கொடி காவிவர
பிரித் ஓதி வளர்த்தார் காவி உடை தரித்தோர்.
ஒவ்வொன்றாய் தமிழன் எல்லாமே இழந்துபோனான்.
சீதளச் சீமைகளின் சொர்க்கத் தீவைவிட்டு,
ஏதிலிக் கூட்டமாக–
கப்பலுக்குள், ரெயிலுக்குள், 'கொன்ரேய்னருக்குள்'–
திருவோடுதாங்கி தெருவீதி அலைபவராய்
யாசகம் செய்கின்ற நாயிற்கடை நிலையிருந்தும்
எங்கள் தேசத்து இன்னல்களை
எங்கள் இனத்து இடர்பாட்டை
இன்னும் மனம் கொள்ளவில்லை,
ஓங்கிக் குரல் எடுத்து உலகில் அதிரவைக்க
உறுதி இன்னும் கொள்ளவில்லை–ஆயின்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி.....
எந்தப் பிறவிக்குள்
அவனை படைத்தாயோ பெருமானே!

-வதனிலா

## தேசம் விடியும் தமிழீழம் .....

தமிழர் தேசத்தை சுட்டெரித்தது. இதனால், சனசமுத்திரமாக மக்கள் இடம்பெயர்ந்து, இருப்பிடமின்றி அவலப்பட்டனர். தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரிய நிலங்கள் இராணுவ அடக்குமுறை ஆட்சிக்கு உட்பட்டன. மாறிமாறி நிகழ்ந்த படையெடுப்புகளோடு உணவு, மருந்துத் தடைகளையும் அரசு இறுக்கி வந்ததால் பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக தமிழ் மக்கள் சந்தித்த இன்னல்களைச் சொல்லில் விபரிப்பது கடினம்."

களுத்துறைச் சிறைச்சாலைப் படுகொலைகளை கொழும்பிலிருந்து கொண்டு சந்திரிகா அரசுக்கு முண்டுகொடுக்கும் தமிழ்க் கைகூலிக் குழுக்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். இதைப் பார்க்க சிரிப்பாக இருக்கிறது.

ஆண்டுக் கணக்கில் சிங்களச் சிறையில் வாடும் செந்தமிழ் இளைஞர்கள், ஒன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அல்லது அவசரகால விதிகளின் கீழ்த்தான் கைதாகி இருக்கின்றார்கள்.

இந்த தமிழ்க் கைகூலி குழுக்கள்தான் அவசரகாலப் பிரகடன நீடிப்புக்கு மாதாமாதம் பாராளுமன்றத்திற்கு வரும் போது பயபக்தியோடு அதற்கு வாக்களிக்கின்றனர்.

அதுமட்டுமல்ல சிங்களம், தமிழீழம் மீது தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புப் போருக்கு தேவையான நிதி ஒதுக்கீடு, வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறும்போது அந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து பாராளுமன்றத்தில் இத்தமிழ் கைகூலிக் குழுக்கள் வாக்களிக்கின்றனர்.

இப்படி வீட்டைக் கொழுத்தும் சனாதிபதி சந்திரிகாவுக்கு நெருப்பைக் கொடுக்கும் தமிழ் கைகூலிக் குழுக்கள் வீடு பற்றி எரியும் போது 'தண்ணீர் கொண்டுவா' என்று முதலைக் கண்ணீர் விடுகின்றனர்.

படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் பச்சை இரத்தம் சந்திரிகாவின் கைகளில் மட்டுமல்ல, இந்த தமிழ் கைகூலிகளின் கையிலும் படிந்திருப்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. மன்னிக்கவும் கூடாது.

கண்ணினும் இனிய சுதந்திரத்தை – உயிரினும் பெரிதான விடுதலையை – யாரும் யாசித்துப் பெறமுடியாது. "தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது இரத்தம் சிந்தி உயிரை விலையாகக் கொடுத்து, போராடிப் பெறவேண்டிய புனித உரிமை." இது தேசியத் தலைவரின் பொன்மொழி.

எமது புனித மண்ணை தமது ஆக்கிரமிப்புப் பாதங்களால் அசிங்கப்படுத்தி நிற்கும் எதிரிப் படைகளை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்போம் என்ற திடசங்கற்பத்துடன் விடுதலைப் புலிகள் கையில் துப்பாக்கியுடன் களத்தில் நிற்கிறார்கள்.

தேசம் விடியும்! தமிழீழம் மலரும்! சுதந்திரக்காற்று சுகமாக வீசும்! களுத்துறைப் படுகொலைகள் இல்லாது ஒழியும்! மறையும்! ✳

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 27- 02 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# தோள் கொடுப்போம் ...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



# கேணல் கிட்டு அவர்களினதும் ஒன்பது போராளிகளினதும் 5 ம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள்....

## லண்டனில்....

இந்தியச் சதியால் வங்கக் கடலில் மாவீரரான தளபதி கிட்டுவினதும் தோழர்கள் ஒன்பதின்மரதும் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 18-1-98இல், வோல்த்தம்ஸ்ரோ-லண்டனில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பிரதிநிதி திரு. சாந்தன் அவர்கள் ஈகச்சுடர் ஏற்றிவைக்க, தேசப்பற்றாளர் திரு. தம்பிராசா அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். அடுத்து நடைபெற்ற செல்வி வைதேகி தம்பிராசாவின் கிட்டண்ணா நினைவுரையைத் தொடர்ந்து, "பிறன்ற் தமிழ்ப் பாடசாலை" மாணவர்களின் "வயலோரக் காட்சி" என்னும் அபிநய நடனம் இடம்பெற்றது. தமிழ் ஈழத்தின் சமகால நிகழ்வுகளை உள்ளடக்கி பண்ணோடு தெளிந்த நீரோட்டமாய் அமைந்த 'ஈழத்தாய் அழைக்கிறாள்' என்ற பாடலுக்கு, பொருத்தமாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தி அளிக்கப்பட்ட நடனம் சிறப்பாக இரு ந்தது.

"மறைந்தும் மறையாத மாவீரன் கிட்டு மாமா" என்ற தலைப்பிலான கவிதையை செல்வி ஆர்த்தி பகீரதன் நல்ல தமிழ் உச்சரிப்போடு வழங்கினார். கிட்டண்ணாவினதும் தோழர்களினதும் மறைவை ஏற்க மறுத்து உணர்ச்சித் தவிப்போடு உருவான 'வான் வெளியில் வந்த செய்தி பொய்யாக மாறாதோ' என்ற எழுச்சிப் பாடலுக்கு, சங்கீத வித்துவான் திருமதி பத்மினி குணசீலனின் மாணவியர் மிக அற்புதமாக வழங்கிய நடனம், ஐந்து வருடங்களுக்கு முன் தமிழ் ஈழ மக்கள் அனுபவித்த சோகச் சூழலுக்கு இழுத்துச் சென்றது.

தமிழர் எழுச்சி நிகழ்வுகளாயின் இவரின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும் பேச்சோ பாட்டோ எதுவானாலும் மழலைக் குரலாலும் செந்தமிழாலும் சபையோரை கவர்ந்துவிடும் சிறுமி கிருஷ்ணி ரமேஷ், இத்தடவை "புலிமாமா புலிமாமா வீட்டுக்கு வாங்க" என்று அழைத்து மெய்சிலிர்க்க வைத்தார். அடுத்து திரு. எம். ரீ. செல்வராசா தயாரிப்பில் கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் நடித்த "கனவில் ஒரு காட்சி" நாடகம் தமிழ்த்தாயையும் அவள் மைந்தர்களையும் மேடைக்கு அழைத்து வந்து காட்டியது.

செல்வி லக்ஷாமினி சச்சிதானந்தன் 'வனவாழ்வு' என்ற தலைப்பில் வன்னியில் - மக்களின் வாழ்வுமுறையை விபரித்த விதம் பலரை சிந்திக்கத் தூண்டியிருக்கும்.

மீண்டும், திருமதி பத்மினி குணசீலனின் மாணவியர் "எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகின்றோம்" என்ற எழுச்சிப் பாடலுக்கு வழங்கிய நடனத்தைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பிரதிநிதி தனது விசேட உரையில், சிறிலங்காவின் 50வது சுதந்திர தினத்தை ஆட்சேபித்து பிரித்தானியாவில் நடைபெற இருக்கும் மாபெரும் எழுச்சிப் பேரணியின் முக்கியத்துவத்தை விளக்கி, இளந்தலைமுறையினர் உட்பட அனைத்துத் தமிழ் மக்களும் கலந்துகொள்ளும்படி அறைகூவல் விடுத்தார். திரு. பத்மராசாவின் புல்லாங்குழலிசையைத் தொடர்ந்து செல்வன். யூட், செல்வன். விசாகன் ஆகியோரின் பின்னணி இசையில் தமிழீழ எழுச்சிப் பாடல் போட்டி நடைபெற்றது. பாடல் போட்டியில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே செல்வன். சசி, திரு. கிரிதரன், செல்வன். அன்ரனி போஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். ✳



## யேர்மனியில்....

17-01-98 அன்று, யேர்மனி டோட்முன்ட் நகரின் புளொறியான் மண்டபத்தில் கேணல் கிட்டு அவர்களினதும் அவரோடு வீரச்சாவெய்திய ஒன்பது போராளிகளினதும் நினைவுநாள் நிகழ்வு நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மனிப் பணியக கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்திய இந் நிகழ்வில் எழுநூறுக்கும் அதிகமான தமிழீழ மக்கள் உணர்வோடு கலந்துகொண்டு மண்ணுக்காக உயிர் ஈந்த அந்த உத்தமர்களை வணங்கி வழிபட்டனர்.

விடுதலைப் புலிகளின் மரபு காத்து, தமிழ் வீரம் காட்டி உயிர் நீத்த அந்த மாவீரரின் திருவுருவப் படங்களுக்கு யேர்மனியின் தென்மாநிலச் செயற்பாட்டாளர் சிறிரவி அவர்கள் சுடரேற்ற, மலர் தூவி சொற்களால் அர்ச்சித்து ஒளி வணக்கம் செய்யப்பட்டது. ஆண்டுதோறும் நடாத்தும் கேணல் கிட்டு ஓவியப் போட்டியில் தெரிவு செய்யப் பட்டோருக்கான போட்டி காலையில் நடாத்தப் பட்டது.

இறுதிப் போட்டியில் தெரிவானோர் மாலை நடைபெற்ற நினைவு நாள் மேடையில் கௌரவிக்கப்பட்டனர். உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் காங்கேயமூர்த்தி அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

"இங்கேயே வளர்ந்துவரும் சிறுவர்கள் மத்தியில் ஒளிவீச்சு ஒளியிழைப் பேழையின் பாதிப்பு உள்ளது. தமது தாயகத்தின் பண்பாட்டையும் தற்போதைய யதார்த்த சூழலையும் அவர்கள் ஒளிவீச்சு மூலமாகத்தான் அறிந்து கொண்டார்கள் என்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது" என ஓவியர் கண்ணன் குறிப்பிட்டார்.

'நிமிர்ந்த நடை', 'பிரபாகரன் படை வெல்லும்' ஆகிய நடனத் தொகுப்புகள் விடுதலை நடனங்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மனிப் பணியகக் கலை, பண்பாட்டுக் கழக நடனக் கலைஞர்கள் வழங்கினர்.

பியோசுரன் என்ற சிறுவன் மழலை மொழியில் கிட்டு மாமா புகழ் பேசினான்.

திரு. தா. சிவநாதன், காவியநாயகன் கிட்டு என்ற வில்லிசை வழங்கினார். சுதந்திரத் தமிழிசையை கண்ணன் வழங்க பிரண வநாதன் மிருதங்கமும் - தேவகுருபரன் தபேலாவும் கமலநாதன் கடத்தையும் சிவரூபன் கஞ்சிராவையும் வாசித்தனர்.

சென்ற ஆண்டு நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சித் தொகுப்பான "மாவீரர் நாள் - 1997" என்ற ஒளியிழைப் பேழை வெளியீடு செய்யப் பட்டது.

"ஒருகாலில் நின்றால் கூட, உனது காலில் நில்" என்ற உயர்ந்த தத்துவத்தை வாழ்ந்து காட்டிய நம்பிக்கையின் சிகரம் கேணல் கிட்டு என கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கா. சிவநாதன் தனது உரையின் போது குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில், ஜனநாயகத் தேர்தல் என்ற பொய்மையின் துணையோடு மனிதப் படுகொலையைச் செய்யும் சந்திரிகாவின் முகத்திரையை அனைத்துலக அளவில் முறியடித்துப் பரப்புரை செய்ய மக்களின் உதவி தேவையென வலியுறுத்தினார்.

இந் நிகழ்ச்சிகளை வலன் ரையின் அவர்கள் தொகுத்து வழங்கினார். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடன் நினைவு நாள் நிறைவுற்றது. ✳

## அவுஸ்திரேலியாவில்....

கேணல் கிட்டு அவர்களினதும், அவருடன் வங்கக் கடலில் சங்கமமாகிய ஒன்பது தோழர்களினதும் ஐந்தாவது நினைவஞ்சலி நிகழ்ச்சி 18-01-98 அன்று சிட்னியில் நடைபெற்றது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அவுஸ்திரேலியப் பொறுப்பாளர் திரு. தி. ஜெயக்குமார் அவர்கள் தீபமேற்றி வைக்க, சிட்னிக் கிளைப் பொறுப்பாளர் திரு. பா. சிறீபாலன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த பொதுமக்களுக்கும், வீர மரணம் அடைந்த போராளிகளுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான மக்கள் வரிசையாக நின்று உணர்வுபூர்வமாக கேணல் கிட்டு அவர்களுக்கும், தோழர்களுக்கும் மலரஞ்சலி செலுத்தினர்.

திரு. ம. தனபாலசிங்கம் அவர்கள், கேணல் கிட்டு எழுதிய "என் இனியவளுக்கு" என்ற நூலை ஆய்வு செய்தார். திருமதி. சரோஜினிதேவி சண்முகநாதன் அவர்கள் பாடல்களைப் பாடினார். அதனைத் தொடர்ந்து கவியரங்கம் நடைபெற்றது. காட்சியும், கானமும் என்ற நிகழ்ச்சி சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. அதன் பின்பு திரு. பா. நேசராஜா எழுதிய கவிதையை திரு.கு. கௌதமன் அவர்கள் வாசித்தார். தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சிட்னிக் கிளையின் பொறுப்பாளர் திரு. பா. சிறீபாலன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை இறக்கி வைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார். ✳



சுவிஸ் லூட்சேர்னில் நடைபெற்ற கிட்டாஞ்சலியில் அங்கையற்கண்ணி இசைக்குழுவினருடன் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர்.

## துப்பாக்கி முனையில்....

இதற்கு-- இந்தக் கூப்பாட்டிற்கு... தலையசைத்து... ரசிக்கின்ற வெளிநாட்டு ஞானசூனியங்கள். ஆகா அற்புதம் என்று பாராட்டவும் செய்கின்றன. இந்த அபத்தத்தை ஏற்று ஆதரிக்க வேண்டும் என, அவை மற்றைய சிங்களக் கட்சிகளையும் தமிழ்க் கட்சிகளையும் கேட்டுக் கொள்ளுகின்றன. சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுப் பொதியின் மகிமையை விடுதலைப் புலிகளுக்கும் விளக்கி, விடுதலைப் புலிகளையும் ஏற்கச் செய்ய வேண்டும் எனவும் அவை சிங்களக் கட்சிகளிடம் வேண்டுகோளும் விடுத்துள்ளன.

ஆனால் தீர்வுப் பொதியில் என்ன உள்ளது என்பது யாருக்கும் சரியாகத் தெரியவில்லை என்பதுதான் விசித்திரம்.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை, உற்சாகமூட்டும், உத்தரவாதங்கள் நம்பிக்கைகள் உறுதிகளுடன் சபதங்களுடன் ஆரம்பித்த 1997ம் ஆண்டு, சோகமாய் கடந்து விட்டது என்பதில் வருத்தபடும் நிலையில் இல்லை. கவலைதரும் கடந்த கால அனுபவங்களை, மக்களை எப்படி மறக்கவைக்க வைப்பது என்பதுதான் தற்போதைய பிரச்சினை. விடுதலைப் புலிகள் குறித்துப் போட்ட தப்புக் கணக்குகளின் அறுவடையை, அரசியல் இராணுவ ரீதியாக பெற்றாயிற்று. அதிலிருந்து புதிய தெளிவு ஏற்படச் சாத்தியமில்லை. பௌத்த சிங்களப் பேரினவாதத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திக்கொண்டு இனப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. அப்படி முனைவதாகச் சொல்வது போலித்தனமானது. அதைத்தான் சிங்கள ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்குவது அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்துவது என்பதெல்லாம் 97ம் ஆண்டில் சந்திரிகா அரசின் பிரதான கோசமாக இருந்தது. 97இல் அது சாத்தியப்படவில்லை. எப்போதும் சாத்தியப்படப் போவதில்லை. 98இலும் அதுவே சந்திரிகா அரசின் கோசமாக இருக்கலாம்.

ஆனால், விடுதலைப் புலிகள் 98இன் ஆரம்பத்தை ஒரு உலங்குவானூர்தித் தாக்குதலுடன் ஆரம்பித்து வைத்துள்ளனர்.

வளமான கைவளம். ✳

www.tamilarangam.net






அயலான் கோடிக்குள் நிரந்தர உறைவுக்கா எண்ணம்!
தன் இனத்தின் இருப்பை, நாடும் உறுதியில்
இரத்த அணுவுக்கே அக்கறை உண்டாம்! – நீயோ??
எங்கேயும் ஓர் அஃறிணையாய் கிடந்து – மடிவாயா?
எங்கள் சுதந்திர வாசல்வரை.... உன்னையும் உயர்திணையாய்,
கௌரவமாய்– அழைத்துச் செல்வதிலே
உறுதியாய் நின்று, அழிந்துபடும் கூட்டத்தில்
நெஞ்சுருகலேனும் கொள்வாயா?

–பரதன்

# சுதந்திர வாசல்வரை...

தூயவர் பலரை இழக்கினும்
துன்பத்தை மலையாய்ச் சுமக்கினும்
ஒருபிடி மண்ணும் அள்ளவிடோம்–பாலரைப்
பட்டினி போடினும் கெஞ்சோம்
குட்டிய கைகளைக் கொஞ்சோம்–அதை
தட்டியே செல்வோம் தலை நிமிர்ந்து
சுதந்திர வாசல்வரை......

–ந. சந்திரகுமார், சுவிற்சலாந்து.

கனவுக்குள் கிடந்த காலம்
கப்பலேறிப் போச்சு
ஏதிலியாய் வாழும் காலம்
எம்மோடு முடியட்டும்.
வாழ்நிலமாம் தமிழீழம்
வரிப்புலிகள் விட்டிடுமா?
சுதந்திர வாசல்வரை –எம்
பணிதான் ஓய்ந்திடுமா?

–அல்லையூர் சி. விஜயன், இத்தாலி.

சுதந்திர வாசல்வரை எம் சுவாசிப்பில்
தமிழீழம்
சுகங்களைத் துடைத்தெறிந்து சுமைகளைத்
தோளில் ஏற்றி
உறக்கத்தைத் தொலைத்து –எங்கள்
உறவையும் தொலைத்திட்டாலும்
நாம் ஆண்ட மண் மீட்டு
அடைவோம் நம் இலட்சியத்தை
அந்த நாள் அருகில் தோழா.

–திருமதி சக்திதேவி சத்தியநாதன்,
யேர்மனி.

ஓயாது நம் போராட்டம்
அது சுதந்திர வாசல்வரை.... என்று
நம்நாட்டில் ஓங்கி நிற்கும் கரங்களிற்கு
சக்தியூட்டவல்ல நம் இனத்தின்
வீட்டுவாசல்கள் – அந்நியன் நாட்டில்
தட்டுங்கள் திறக்கப்படுமா? இல்லை இல்லை
தட்டாமல் எப்போதும் திறந்திட்டிடும்
நாளைய சூரியன் தாயக வாசலில்.

–மகேந்திரம் றஜிதரன், Holland.

காலம் நமக்களித்த
கார்த்திகைக் குழந்தையாம்
பிரபாகரன் என்ற செந்தணலின் பொறியாலே–
கருவாகி
புலிவேங்கைகளின் குருதியாலே புனிதமாகிய
நம் தேசம்–தமிழீழக் குழந்தையவள்.
சுதந்திர வாசல்வரை......சென்று தாலாட்ட
பார் எல்லாம் பரந்திருக்கும்
சோதரரே ஒன்றிணைந்து கைகொடுப்போம்.

–சங்கையூர் சீதா, யேர்மனி.

சுதந்திர வாசல்வரை துயர்சுமந்து
வந்துள்ளோம்
வானும் கடலும் எமதாக, அன்னியன் எம்
மண்ணின் நெருப்பிற் கால்வைத்துப்
பொசுங்குகிறான்.
கண்ணீராற் காத்தபயிர் கருகாது ஓர் நாளும்.
விதைகுழிகள் எங்கும் வீரம் முளைக்கிறது
சிதையில் எரிந்தழியும் சிங்களத்து ராணுவமே
உரமாக, ஈழவுதயம் மிகவருகில்.

–யுகசாரதி, யேர்மனி.

குண்டுகள், கப்பல்கள், கொடிய டாங்கிகள்
அண்டங்கள் அழியப் பிளிறும்–தமிழன்
பிண்டங்களங்கே துண்டுகளாகி
பிணவாடை வீசிக் கிடக்கும்.
தண்டங்களால் எம்மவர்கள் தலைகள் உருண்டு
தாய் மண்ணில் அழிந்து போனாலும்
மீண்டும் சுதந்திர வாசல்வரை எங்கள்
வெற்றி முழக்கங்கள் விழித்து நிற்கும்.

–திருமதி தவம் சித்திரா, யேர்மனி.

தூக்கிய துப்பாக்கி முழக்கங்கள் ஓயாது
தாய் மண்ணை மீட்கும் வரை–என்றோ
தூக்கம் இழந்த கண்கள் மூடவே மூடாது
தமிழ் மொழி காக்கும் வரை–அன்று
வீறுகொண்டு பாய்ந்த வேங்கை பதுங்கியே
ஓடாது
சுதந்திரம் காணும் வரை – தினம்
வீழும் உடலங்கள் படிகளாய் மாறாதோ
சுதந்திர வாசல்வரை!

–திருமதி வசுந்தரா சிவசோதி.

விடுதலையின் நாதம் வேங்கைகளின் வேதம்
விழிநீர்கள் சிந்தும் வேதனையின் வீரம்
விட்டுக்கொடுத்தல் அது கிடையாது வேகத்தில்
தட்டிப்பறிப்பவர்கள் சரிவர் அவர் காலடியில்
தொட்டுத் துடைத்திடுவோம் தோழர் காயங்களை
முற்றும் துணிந்திட்டோம் முடிவு எதுவென்று
சற்றும் தயக்கமில்லை செல்வோம்
சுதந்திரவாசல்வரை
பெற்று மகிழ்ந்திடுவோம் பிறந்த பொன் நாட்டை.

–அனுசூயா இளையவன், யேர்மனி.

## ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

யேர்மனி–துன்னாலையூர்க்குகன், ஈழத்தமிழன் மதன், க. சிறிராமசோதி, மயிலிட்டியான் தங்கவேல், செல்வி. திருஷ்ஜா திருநாவுக்கரசு, வேணுகோபாலன், மா. புஷ்பா–கரன் கிளியூரான், திருமதி இராஜேஸ்வரி லோகநாதன், செல்ல–முத்துக்குமாரசாமி.
நோர்வே–பொன். சிவா, திவ்யா, சிவராஜா விஜயரூபன், சா. சிவகௌரி.
பிரான்ஸ்– நவாலியூர் பா. செல்வநாதன், தனம்.
சுவிற்சலாந்து–க.ஜெயசகுந்தன்.
இத்தாலி–யோ. றட்ணகுமார்(மணற்காடு), லே.டெசி (மணற்காடு)
ஜெயமணி, புங்கையூர் த. மதி, அமலா ஜெயந்தன்.

அன்று எம் உறவுகள் தங்கள்
மனத்தினில் நினைத்தும் பார்க்காததை
இன்றைய நம் உறவுகள் தங்கள்
உயிர்களை இழந்து உற்ற
உறவுகளை பிரிந்து உதிரக்
கடலினில் மூழ்கி, செல்கின்ற
தூரம் சுதந்திர வாசல்வரை....

–மு. ரா. சர்வா, யேர்மனி.

இந்திரலோகத்தை எமக்கு தருவதாக
தந்திரமாகவே சந்திரிகா தேர்தல் நாடகமாடினா
மந்திரவலையினில் எப்போதும் சிக்காது தமிழினம்
சந்துகள், பொந்துகள் வாழ்விடமாக
சாவு, பட்டினி எம்மோடே கலந்ததாக
நிரந்தர விடிவுக்கு நெடும் பயணம் புறப்பட்டு
சுதந்திர வாசல்வரை இன்று சும்மாவா வந்தோம்
சுட சுட வீழ்ந்தவரையும் சுமந்தபடியல்லவா...

–கைலம்மான், பிரான்ஸ்.

www.tamilarangam.net

# துளியும் வெட்கமில்லை என்றானால் ....

## துணியெதற்கு? துண்டெதற்கு?

நல்லகாலம் பிறந்தாச்சாம்.
குடுகுடுப்பைக்காரர்கள் குறிசொல்லத் தொடங்கிவிட்டனர்.
இனியென்ன வேண்டும் உனக்கு?
புகுந்து விளையாடு.
தமிழனே!
நீ தேடிய ஒளிவட்டமும்,
அவாவிய நிமிர்ந்த வாழ்வும்
உனக்கினிக் கிட்டும்?
வாய்க்கால் வெட்டும் மாநகர ஆட்சிக்கும்,
நாய்பிடிக்கும் நகர சபைக்கும்,
சின்ன மதகு திருத்தும் பிரதேசசபைக்கும் தானே



இத்தனை விலைகொடுத்துப் போராடினாய்?
நேற்று வரை நெஞ்சு நிமிர்த்தியிருந்த
ஆற்றலின் வடிவே!
யாழ்ப்பாணக் குடாநாடே!
கண்ணாடிக்குடுவையில் கருத்தரித்த "தலைவர்கள்"
உன்னைக் கைபிடித்துப் பார்க்க வருகின்றனர்.
என் தாய் மடியே!
உன் அடிமன ஆழத்தை யார்தான் அளவெடுக்க முடியும்?
நெஞ்சுக்குள்ளெரியும் நெருப்பைக் கணக்கெடாது,
மௌனத்தைச் சம்மதமென்று எண்ணியபடி,
பெயர் தெரியாத புதுமுகங்களெல்லாம்
ஊர் வருகின்றனர்.
கேட்டுப்பார்.
உன் தலைவர்களென்று சத்தியப்பிரமாணம் செய்வர்.
உலகுக்கே தலைமைதாங்கும் தகுதியுள்ள உனக்கு
இவர்களெல்லாம் தலைவர்களென்றால்.....
அழுவதா? சிரிப்பதா?
நேற்றுவரை கொழும்பிலிருந்து
கப்பலில் உனக்குப் பெற்றோல் வந்தது.
சக்குப்பிடித்த குத்தரிசியும்,
சாராயமும் வந்தது.
இன்று விமானத்தில் "தலைவர்கள்" இறக்குமதியாகின்றனர்.
உள்ளே புகைந்தபடி கிடக்கும் எரிமலையை
எவர்தான் கணக்கிலெடுத்தார்?
வந்திறங்கும் இவர்களின் வரலாறு தெரியுமா?
சந்தர்ப்பவாதச் சகதியில் புரண்டெழும்
எந்தச் சுரணையுமற்ற எருமைகள்.
கண்ணீரே வாழ்வென உனக்கெழுதிய கைகளுக்கு
வளையல் பூட்டி வடிவுபார்த்தவர்கள்.
வற்றாவுன் கிணற்றின் அடிநீருறிஞ்சிய
தீயின் நாவுகளுக்குத் தீனி போட்டவர்கள்.
அவலமுற்று நீ ஊரெங்கும் ஓடியபோது,
கவலையற்றிருந்த "கொழும்பு உல்லாசிகள்"
வேதமோதும் சாத்தான் மரத்தின் வேர்கள்.
விலைபோன பழைய சேனாதிபதிகளின்
புதிய வாரிசுகள்.

## உலைக்களம்

■ வியாசன்

நவாலியிலும்,
நாகர் கோவிலிலும்,
யாகப்பர் கோவில் நடுக்கூரை மீதும்
குண்டெறிந்தவனுடன் கூடிக்களித்திருந்தோர்
இன்று
காணாமற் போனவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கின்றனர்.
உழுது விதைத்தவன் ஊரில்லாதபோது,
கதிரறுக்க வந்துள்ளனர் முகமூடித்திருடர்கள்.
ரோசநரம்பை ஏலத்தில் விற்றுவிட்டு
வேசங்கள் வீதியுலா வருகின்றன.
எட்டு வருடங்கள் எங்கெங்கோ தீனிபொறுக்கிவிட்டு,
முற்றத்திலிறங்குகின்றன கண்கொத்திப் பறவைகள்.
விண்தொட நிமிர்ந்த உன்வாழ்வு கருக்கிய
பேய்களின் கண்களுக்கு மையெழுதிய பிடாரிகள்
வாசல் வருகின்றனர்.
கையில் விளக்குமாறுடன் காத்திரு.
விளாசு.
செம்மணியிலுந்தன் சிறு பூ சிதைந்தபோது,
அந்தக் கண்மணி கதறிய காலக்குரலுக்கு
மௌனத்திரையிட்டு மறைத்தவர்கள்
எந்த முகத்தோடு வந்துள்ளனர்.
மானத்துக்கணியும் வேட்டியை மடித்து வைத்துவிட்டு
ஆடென்றாள்.... அவள்
இவர்கள் அம்மணமாக ஆடுகின்றனர்.
கூரையேறிக் கோழிபிடிக்கத் தெரியாதவன்
வானமேறி வைகுந்தம் போவானாம்.
துளியும் வெட்கமில்லை என்றானால் –
துண்டெதற்கு? துணியெதற்கு?
கண்ணீரில் உன் கன்னங்கள் கரைந்து
உயிர்கருக நீ ஓலமிட்ட போது .....
"வெற்றிவேலரின் மருமகளுக்கு" விழிதிறக்கவில்லை.
வெள்ளவத்தையில் வீதியுலாவும்,
கொள்ளுப்பிட்டியில் கோலாகலமாகவுமிருந்த
சீமாட்டிக்கு இன்று சிம்மாசனம் தேவையாம்.
பழைய உறவுகளுக்குப் பாலம் அமைக்கவந்துள்ளார்.
விடுதலைக்கு உயிர் விலை கொடுத்து
நீ அவலத்தின் மடியில் அந்தரித்துக் கிடந்தபோது,
சுதந்திரத்துக்கான
காணிக்கையென நீ கண்ணீர்ப்பூக்களைச் சொரிந்தபோது,
மாணிக்க தாசனென்ற "மக்கள் திலகத்துக்கு"
உனக்காகப் பேச ஒருவார்த்தையும் கிட்டவில்லை.
தாண்டிக்குளத்தில் தலையாட்டிக்கொண்டும்,
வவுனியாவில் வரி வாங்கிக் கொண்டும்,
பிள்ளை கடத்திப் பேரம் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு
நகரபிதாவாகும் நப்பாசை வந்துள்ளது.
இன்னும்.... இன்னும்.... எவரெவரோ...
பேர் – ஊர் தெரியாத "பிரபலங்களெல்லோரும்"
பாருந்தன் வீதியிலே...... பறக்கின்றார்.
ஊரையடித்து உலை மூட்டி வாழ்ந்தவர்கள்,
சங்கக்கடையுடைத்துச் சாப்பிட்ட சாதுரியர்,
தர்மகர்த்தா சபையின் தலைவர்,
செயலாளர்,
சைக்கிள் களவெடுத்த சமாதான நீதவான்கள்
எல்லோரும் உனக்கு இனித்தலைவரென்றானால்
உள்ளே உனக்கெரியும் உரிமைத்தீ என்னாகும்?
ஆவிகலங்கி அந்தரிப்புக்குள்ளான
தாயே! கலங்காதே.
சூரியனைச் சுற்றிய தூசிப்படலம்
விரைவில் எரிந்து பொசுங்கும்.
கொடியேறியுள்ளது.
ஊர் முழுதும் வீதியில் திரண்டுள்ளது.
திருவிழா முடிந்ததும் வீதிவெளிக்கும்.
பிறகும் நாங்களும், நீயும்தான்.
எம்மைப்பிரிக்க எவரால் முடியும்?
உன் உயிர் மூச்சையே சுவாசித்தபடி உள்ளோம்.
வருவோமெனச் சொல்லுக.
வருவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்